மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

நானே நாடெங்கும் தேவை!

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு காமராஜ் தேவை என்று காமராஜரே அறிவித்திருக்கிறார்!
—'கங்கை' கார்ட்டூன் செய்தி

மாலைமணி
ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 | 24—1—60 | ஒலி 12

தூத்துக்குடி மக்களே ! வாகை சூடுவீர் !

தூத்துக்குடி இடைத்தேர்தலைப்பற்றி நமது கழகக் காவலர்—நாவலர் நெடுஞ்செழியன் விடுத்திருக்கும் அறிக்கையை எல்லோரும் படித்திருப்பீர்கள் என்றே நினைக்கிறோம்!

தூத்துக்குடி இடைத்தேர்தலில் நாம் என்னென்ன செய்யவேண்டும் என்பதை தெளிவாக எடுத்து விளக்கி—உடனடியாக அந்தப் பணியில் ஈடுபடுமாறு வேண்டியிருக்கிறார்! தூத்துக்குடி வட்டாரத்து மக்கள் உடனடியாக அந்தப் பணியில் ஈடுபட வேண்டு மென்று நாங்களும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்!

நமது கழகக் காவலர் நெடுஞ்செழியன் இடும் கட்டளையை, கழகத் தோழர்கள் கடமை உணர்ச்சியோடு பாடுபட்டு நிறைவேற்றித் தருவார்களானல் தூத்துக்குடியில் வெற்றிவாகை சூடுவது நிச்சயம், வெகு நிச்சயம்!

நமது பொதுச் செயலாளர், "கழகத் தோழர்கள் அனைவரும் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து, காங்கிரஸ் கட்சியின் போக்கை விளக்கி நல்லாதரவைத் திரட்ட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்! அத்தோடு தேர்தல் செலவுக்காக நிதி திரட்டி பொருளுதவி செய்யும்படியும் கேட்டிருக்கிறார்!

கழகத் தோழர்கள் அனைவரும் இதை மனதில் நன்கு பதிய வைத்துக் கொண்டு உடனடியாக பணிபுரிய வேண்டும்! கட்சி வித்தியாசம் பாராட்டாமல், கொள்கை வேறுபாடுகளை மனதில் வைத்துக் கொள்ளாமல், கருத்து வேற்றுமைக்கு துளியும் இடம் கொடாமல் எல்லா கட்சி நண்பர்களையும் அழைத்துக் கொண்டு வீடு வீடாகச் செல்ல வேண்டும்! கழக அபேட்சகர் சிவசாமியின் பண்புகளைப் பற்றி விளக்க வேண்டும், அவர் சார்ந்திருக்கும் கழகத்தின் இலட்சியத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும்—காங்கிரஸ் ஆட்சியில் இதுவரையில் நாம் அடைந்துள்ள இன்னல்களைப் பற்றியும் தெளிவாகச் சொல்ல வேண்டும்! யார் யார் நமக்கு ஆதரவளித்தாலும் அந்த ஆதரவுகளை நாம் பெருமையோடு பெற்றுக் கொள்ள வேண்டும்!

நேற்று வரையில் நமக்கும், கம்யூனிஸ்டு நண்பர்களுக்கும் பகைமை இருந்திருக்கலாம்! போட்டி இருந்திருக்கலாம், பணிபுரிவதிலே பொறாமை கூட இருந்திருக்கலாம்! இன்றைய தினம் இருவருமே அவைகளை மறந்து விட வேண்டும்!

நம்முடைய முக்கிய நோக்கம், முதல் நோக்கம் காங்கிரஸ் கட்சியை வீழ்த்த வேண்டும் என்பது தான்! காங்கிரஸ் கட்சியை வீழ்த்தினல் தான் எந்தக் கட்சியினுடைய இலட்சியமும் வெற்றி பெறும்! காங்கிரஸ் கட்சியை ஒழித்தால் தான் நாட்டின் அவல நிலை மாறும், நாட்டில் நிலவி வரும் வறுமையும் ஒழியும்! இதை எல்லா கட்சி நண்பர்களும் அறிந்து தங்கள், தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும்!

காங்கிரஸ்கட்சி எல்லோருக்கும் பொது எதிரி! பொதுவுடமை வெற்றி பெற வேண்டுமானலும், திராவிட நாடு விடுதலை பெற வேண்டுமானலும் காங்கிரஸ்கட்சியை ஒழித்தால் தான் வெற்றி பெற முடியும்!

எல்லாவற்றையும் விட, உடனடியாக நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும்! ஏழைகள், எளியவர்கள் எல்லோரும் உயிரோடு வாழ வேண்டும்! அதற்கான வழிகளை எல்லா கட்சிகளும் சேர்ந்து உடனடியாகச் செய்ய வேண்டும்!

சர்க்கார் தரும் புள்ளி விவரங்கள்படி பார்த்தால் நாட்டில் பஞ்சத்திற்கே வழியில்லை! பட்டினிக்கே நியாயமில்லை! உற்பத்தி மூன்று பங்கு, நான்கு பங்கு பெருகி இருப்பதாகக் கூறுகிறார்கள்! ஆனலும் உணவுப் பொருள்கள் பணக்காரர்களின் சொத்தாகவே இருந்து வருகிறது!

எங்கு நோக்கினலும் வயற்காட்டைப் பார்க்கிறோம்! அங்கே வளத்தைக் காண்கிறோம்! என்றாலும் அரிசியில்லை! இதைவிட கேவலம், இதைவிட வெட்கக் கேடு வேறு என்ன இருக்கிறது? இந்தப் பொறுப்பு யாரைச் சார்ந்தது?

நாடாள்வது அதிகாரிகளை மிரட்ட மட்டுமல்ல, போலீசைக் காட்டி பயமுறுத்த மட்டுமல்ல, ஆயிரம், இரண்டாயிரம் என்று சம்பளம் வாங்கிக் கொண்டு காரில் உல்லாசமாக பவனி வர மட்டுமல்ல! ஏழை முகமும் பார்க்க வேண்டும், எளியவர் துயரும் துடைக்க வேண்டும்!

சுதந்திரம் என்பது நாட்டுக்குடையவர்கள் ஆட்சி பீடம் ஏறி அதிகாரம் செலுத்துவது மட்டுமல்ல, சொந்தக் கொடியைப் பறக்க விட்டு—"தாயின் மணிக் கொடியைப் பாரீர்" என்று பெருமைப் பேச மட்டுமல்ல! எல்லோருக்கும் வாழ்வும் அளிக்க வேண்டும்!

சுதந்திர நாடு என்றால் உண்ண உணவு இருக்க வேண்டும், உடுக்க உடை இருக்க வேண்டும், இருக்க இடம் கிடைக்க வேண்டும்! இதைத் தான் சுதந்திர நாடு என்று கூறுவார்கள், சொந்த ஆட்சி என்றும் சொல்லுவார்கள்! நமக்கோ இவைகளெல்லாம் எட்டாத பொருளாக இருக்கின்றன, கிட்டாத பொருளாக இருக்கின்றன!

சுதந்திரம் கிடைத்தால் சுகம் கிடைக்கும் என்றார்கள், சோறு கிடைக்கும் என்றார்கள்! ஏன் கிடைக்கவில்லை! இதற்கு யார் பொறுப்பாளி?

திறமையுள்ளவர்கள் ஆட்சியில் இல்லை, ஆற்றல் படைத்தவர்கள் ஆட்சியில் இல்லை! விவேகமுள்ளவர்கள் ஆட்சியில் இல்லை! தைரியமுள்ளவர்கள் ஆட்சியில் இல்லை! தட்டிக் கேட்கும் வீரமுள்ளவர்கள் ஆட்சியில் இல்லை!

கொடி பிடித்தவர்களும், வந்தேமாதரம் போட்டவர்களும், அல்லாகு அக்பர் என்று கூவியவர்களும் தான் இன்றைய தினம் நாட்டை யாள்கிறார்கள்!

இவர்களுக்குத் திறமையில்லாவிட்டாலும் பரவாயில்லை துணிவாவது இருக்கிறதா? வடநாட்டாரை தட்டிக் கேட்டு வாழ்வு பெற தைரியமாவது இருக்கிறதா? ஒன்றுமே இவர்களுக்குக் கிடையாது! இந்த நிலையில், இவர்களை எத்தனை நாளைக்குத் தான் ஆட்சி பீடத்தில் வைத்துக் கொண்டு நாம் இன்னல்களை அனுபவிக்க முடியும்! எனவே காங்கிரஸ் கட்சியை விரட்டுவதொன்றே நாட்டின் நல்வாழ்வுக்கு நல்வழியாகும்! இதை எல்லா கட்சி நண்பர்களும் உணர்ந்து பணிபுரிய வேண்டும்!

காங்கிரஸ் ஆட்சியை விரட்டியடிக்க தூத்துக்குடி ஒரு வழி காட்டியாக, முன்மாதிரியாக இருக்க வேண்டும்!

தூத்துக்குடி, தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும்! அந்தப் பகுதியில உள்ள தொழிலாளர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளையும் சார்ந்திருக்கலாம்! என்றாலும் எல்லாக் கட்சித் தொழிலாளர்களும் நமக்கு நல்லாதரவளிக்க முன் வந்திருப்பதாக அறிகிறோம்! கழக நண்பர்கள் தொழிலாளர்களின் நன் மதிப்பைப் பெற நல்ல பணிகளை புரிய வேண்டுகிறோம்!

நமது பொதுச் செயலாளர் வேண்டுகோள்படி எல்லா கட்சி நண்பர்களின் நல்லாதரவைப் பெறுவதோடு, வீடு வீடாகச் சென்று மக்களின் அன்பையும் பெற வேண்டும்! அத்தோடு தேர்தல் நிதியும் சேர்த்து நமது வெற்றியை எளிதாக்கிக் கொள்ள வேண்டும்!

சர்வாதிகாரம் ஒழிய, நாட்டிலே நல்வாழ்வு மலர தூத்துக்குடியிலே வெற்றிக் கொடியை நாட்டுங்கள்!

தூத்துக்குடியில் பறக்கின்ற வெற்றி கொடி தான் கோட்டையிலே பறக்கப் போகின்ற ஆட்சிக் கொடியாகும் என்பதை நேருப் பெருமகனும், காந்தி சீடர்களும் அறிய வேண்டும்! இதை அறியச் செய்வது தூத்துக்குடி மக்களுடைய கடமையாகும்!

டில்லி ஆதிக்கத்திலே இருந்து விடுபட்டு மாநிலங்கள் பிரிந்து வாழ உரிமை அளிக்கப்பட வேண்டும்!

சுண்ணும்பு இல்லா விட்டால் வெற்றிலை சிவக்காது! திராவிடம் பிரிந்தாலன்றி நமக்கு வாழ்வு கிடைக்காது!

அறிஞர் அண்ணா பேருரை!

சென்னை இளைஞர் மன்றம், என் எஸ், கே. படிப்பகம் இரண்டாம் ஆண்டு விழா நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் சு. துலுக்கானம் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் மேயர், துணைமேயர் பாராட்டும் நடைபெற்றது. பாராட்டுக்கு மேயரும், துணைமேயரும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்!



பின்னர், நகராட்சி மன்ற உறுப்பினர் திரு. ஜீவரத்தினம் அவர்கள் பேசுகையில் நகர மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிய பணிகளை குறித்து பேசினார். மன்ற செயலாளர் ஆண்டறிக்கையை வாசித்த பின்பு அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார். அறிஞர் அண்ணா அவர்கட்கு பல மன்றங்கள், படிப்பகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப் பட்டன!

அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அன்புள்ள தலைவரவர்களே, அருமை தோழர்களே! இந்த வட்டாரத்திலே உள்ள தோழர்கள் இளைஞர் மன்றம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி பொது மக்களின் நல்லாதரவு பெற்று பணியாற்றி வருவதைக் கண்டு அவர்களை மனமார பாராட்டுகிறேன்!

மன்றம் ஆரம்பிப்பது எளிதான காரியம், அதைத் தொடர்ந்து நடத்தி செல்வதுதான் கடினமான காரியம். நண்பர்கள் இதிலே வெற்றியடைந்திருப்பது கண்டு அவர்களைப் பாராட்ட மெத்த கடமைப் பட்டிருக்கிறேன்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை துவக்கிய நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கும் துணை மன்றங்கள் ஏற்படுமா என்று பல பேர் ஐயப்பாடு கொண்டனர்! ஆரம்பித்தாலும், தொடர்ந்து இருக்க முடியுமா என்றும் ஐயப்பாடு கொண்டவர்கள் இருந்தனர்! இப்போது பல துணை மன்றங்கள் சென்னையிலே மட்டுமல்ல, தமிழகமெங்கும் பல துணை மன்றங்கள் தோன்றியுள்ளன! அவைகளின் ஆண்டு விழாவும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன!

இந்த மன்றத்தின் முதல் ஆண்டு விழாவின்போது என்னை நண்பர்கள் அன்புடன் அழைத்தார்கள். சென்ற தடவை பெருமழை பெய்த காரணத்தால் கூட்டம் நடைபெறவில்லை! மறுபடியும் என்னை அழைத்து இந்த மாபெரும் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!

நான் வருகிற நேரத்தில் நண்பர் ஜீவரத்தினம் சென்னை நகரசபையில் சாதித்த சாதனைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்!

நகரசபை தேர்தலில் நாற்பத்தைந்து பேர் நம்மவர்கள் வெற்றி பெற்றார்கள் என்று அறிந்ததும், திருவாரூரிலே நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினேன்—'நாற்பத்தைந்து பேர் வெற்றி பெற்றோம் என்றாலும், மேயர் பதவிக்கு போட்டியிட மாட்டோம்! நகர சபையில் எதிர்க் கட்சியாகவே இருந்து நாட்டுக்கு நல்ல காரியம் செய்வோம்' என்று!

'மெயில்' பத்திரிகை—நாற்பத்தைந்து பேர் வெற்றி பெற்ற பின்னும், திராவிட முன்னேற்ற கழகம் பொறுப்பிலே இருந்து ஓடப் பார்க்கிறது என்று கேலி புரிந்து எழுதியது!

அதற்குப் பிறகு சென்னை கடற்கரையிலே நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் மேயர் பதவியை ஏற்றுக் கொள்வதென்று முடிவுக்கு வந்தோம்! மேயர் பதவியை ஏற்றுக்கொண்டோம்! இப்போது இரண்டாவது தடவையும் மேயர் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம்!

முதல் தடவை நடைபெற்ற மேயர் தேர்தலில், பெரிய கட்சி என்று சொல்லிக் கொள்கின்ற காங்கிரஸ் கட்சி கடமையிலே இருந்து தவறிவிட்டது! சின்ன கட்சியான திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு எதிர்ப்பு காட்டினார்! சுயேச்சைகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க ஏற்பாடு செய்தார்கள். சென்னையிலே வேறு இடங்களிலே சொல்லாததை இங்கே சொல்கிறேன்! ஏன்?

எதிர்ப்பு தோன்றுவதற்கு காரணமாக இருந்தது, இந்த இடம் என்பதாலேதான்!

நண்பர் அரசு மேயரானதும் திறம்பட பணியாற்றி, அதிகாரிகள் பாராட்டத்தக்க விதத்திலும், பொதுமக்கள் போற்றத் தக்க விதத்திலும், மாற்றார் குற்றஞ் சாட்ட முடியாத அளவில் திறமையோடு பணியாற்றினார்!

முதல் தடவை தோற்று விட்டதால், இரண்டாவது தடவையாவது வெற்றிபெற வேண்டும் என்று வெகு மும்மரமாக வேலை செய்தார்கள் காங்கிரஸ் கட்சியினர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஏழை எளியவர்கள்—ஆயிரம், இரண்டாயிரம் கொடுத்து கோழிக் குஞ்சை பருந்து அடித்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் கட்சிக்கு இருப்பது உண்மையான வலிவு அல்ல!

அண்ணா பேச்சு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுபோவது போல் கல்கத்தா, காரைக்கால் போன்ற இடங்களுக்கு கொண்டு போகலாம் என்று நினைத்தார்கள்! போகலாம் என்று ஆளுங்கட்சியிலேஇருந்து சிலர் எண்ணுவதாகவும் சிறு சிறு துண்டு அறிக்கை மூலம் வெளியிட்டிருந்தார்கள்!

நமக்கு எதிர்ப்பு தெரிவித்த போது இந்த வட்டாரத்திலே உள்ள அரசியல் தலைவரை நமது தோழர்கள் சந்தித்து, ஆதரவு கேட்ட.போது திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருக்கவேண்டியதுதான்! ஆனால் காலந் தாழ்ந்து வந்துவிட்டீர்கள்! முன்னமேயே வந்திருந்தால் உதவி செய்திருப்பேன் என்று கூறினார்! எட்டு மாதத்திற்குப் பிறகு இந்த நல்லெண்ணம் வந்திருக்கிறது! இந்த நல்லெண்ணம் நீடித்திருக்க வேண்டும்! பல கட்சிகளின் மோதல் இல்லாமல் இருப்பதற்கு வழி வகுக்க வேண்டும்!

இதைச் சொல்லுவதற்குக் காரணம், போன மாதத்தில் சென்னையில் காங்கிரஸ், திராவிட கழகத்தைத் தவிர மற்ற எல்லா கட்சிகளும் கலந்து கொண்டு உணவு விலை ஏற்றத்தைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டன! இதில் குறிப்பாகவும் சிறப்பாகவும் நண்பர் ம. பொ. சி. கலந்து கொண்டார்! நானும் எனது கருத்தை வெளியிட்டேன்!

காங்கிரஸ் கட்சிக்கு இருப்பது உண்மையான வலிவு அல்ல! எதிர்க்கட்சிகள், கோயில் நவக்கிரகம் ஒன்றுக்கொன்று பார்க்காமல் இருப்பது போல் இருப்பதால் தான் காங்கிரஸ் கட்சி வலிவுள்ள கட்சியாக தெரிகிறது! உண்மையான பலம் காங்கிரசுக்கு இல்லை! இதை தேர்தலில் வாக்களித்த ஓட்டு கணக்கை எடுத்துப் பார்த்தாலே தெரியும்!

1962ம் தேர்தலில் காங்கிரசை ஒழிக்க எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென்று சொன்னேன்! இப்படிக் கூறுவதால் திராவிடநாடு பிரச்னையை கைவிட்டுவிட்டதாக அர்த்தமல்ல! திராவிடநாடு பிரிவினையிலே அசைக்க முடியாத நம்பிக்கை உடையவன் நான்!

திராவிடநாடு பிரிவினை பிரச்னையில் மற்ற கட்சிகளை நம்பி ஈடுபடவில்லை! திராவிட முன்னேற்ற கழகத்தின் சொந்த வலுவை நம்பித்தான் இந்த பிரச்னையிலே ஈடுபட்டிருக்கிறது! அதற்காக மற்ற கட்சிகளை குத்தகைக்கும் எடுக்க மாட்டேன், ஒப்பந்தத்திற்கு அழைக்கவும் மாட்டேன்!

ஆகவே தான் எல்லா கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் திட்டத்தைக் கூறினேன்.

காங்கிரசை ஒழிக்க நாட்டுப் பிரிவினையை நாம் நம்பி இருக்கிறோம். பிரிவினையை விரும்பாத கட்சிகள் எப்படி ஒன்றுபடுவது?

மத்திய சர்க்காரிலே அதிகமான அதிகாரம் குவிந்திருக்கிறது என்பதை இப்போது ஓரளவு மற்றக் கட்சிகள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நண்பர் ம. பொ. சி. மறந்திருப்பார் என்று நினைக்கிறேன். முன்பு இந்தக் கருத்தை—

"சுயராஜ்யம் வந்தது—அந்த சுதந்திரக் கப்பல் பம்பாயோடு நின்றுவிட்டது. சென்னைக்கு வரவில்லை"

என்று தெரிவித்தார்.

மத்திய சர்க்காரிலே அதிக அதிகாரம் குவிந்திருக்கின்ற காரணத்தாலே தான் கேரளா ஆட்சி நிலை மாறிற்று! மாநில சர்க்காருக்கு அதிக அதிகாரங்களை மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டும்! தான் வைத்திருக்கும் அதிக அதிகாரங்களை மத்திய சர்க்கார் குறைத்துக் கொள்ள வேண்டும்.

தேர்தல் காலத்தில் நான் சொன்னேன்— 'மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு குறிப்பிட்ட அளவில் தான் வரியை செலுத்த வேண்டும். அதிக அதிகாரங்களை மத்திய சர்க்கார் குவித்து வைத்திருக்கக் கூடாது இதை இந்திய அரசியல் சட்டத்தில் திருத்த வேண்டும்' என்று!

இந்திய அரசியல் சட்டத்தை திருத்த வேண்டுமென்றால் டெல்லி பாராளு மன்றத்திலே மெஜாரட்டியாக இருக்க வேண்டும்.

இப்போது இருக்கின்ற சிக்கல்களையும் குழப்பத்தையும் நீக்கிவிட்டு—பாராளு மன்றத்திலே தான் எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்ற நிலைமாறி மாநில சட்ட மன்றமே தீர்மானங்களை நிறைவேற்றும் உரிமை பெற வேண்டும்,

நான்காவது, மற்றவர்கள் கவனிக்க விட்டுவிட்டது. இந்திய அரசியல் சட்டத்தில்—

"ராஜ்யங்கள் பிரிந்து போகிற உரிமை எல்லா ராஜ்யங்களுக்கும் இருக்க வேண்டும். அந்த உரிமையை மாநில சர்க்கார்களுக்கு அளிக்க வேண்டும்.

ஐந்தாவதாக அந்த உரிமை, டெல்லிக்கு போய் தான் ஏற்பட வேண்டும் என்று இருக்கக் கூடாது. மாநில சர்க்காருக்கே அந்த உரிமை ஏற்பட வேண்டும் என்றும் திருத்த வேண்டும்!

பக்கத்திலே இருக்கும் நண்பர் சிவஞானம் நான்கை கவனித்தார். ஆனால் ஒன்றை மட்டும் கவனிக்கவில்லை. என்னை கவனித்தால் போதுமா? வெற்றிலை சிவக்க வேண்டுமென்றால் பாக்கு கொடுத்தால் மட்டும் போதாது. சுண்ணாம்பும் கொடுக்க வேண்டும். மூன்றும் கலந்தால் தான் வெற்றிலை சிவக்கும், யூகம் உள்ளவர்கள் அப்படித் தான் செய்வார்கள்!

'அண்ணா வாருங்கள் சாப்பிடலாம்' என்று பேச்சுக்கு ஒரு நாள் அழைத்து சோறு போடுகிறீர்கள். மறுநாள் நீட்டு கை இந்தா சோறு என்று போட்டால் என்ன அர்த்தம்? அதைப் போல் தான் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வெற்றிலைக்கு சுண்ணாம்பு கொடுக்காதது போல், இந்தா ஒரு பிடி சோறு என்று கையிலே போடுவது போல் நண்பர் ம. பொ, சி. கூறுகிறார்!

"அண்ணாத்துரை திராவிட நாட்டுப் பிரிவினையை ஒத்திப் போட்டு விட்டு வந்தால் ஆதரவு தருகிறேன்" என்று எழுதினார்.

கடல், கூவம் ஆற்றைப் பார்த்து நாற்றத்தை நீக்கி விட்டு வா என்று அழைப்பது போல் இருக்கிறது!

நான் சொல்லுகின்ற கருத்துக்களை நண்பர் சிவஞானம் ஏற்றுக் கொள்வதாக இருந்தால், நாங்களும் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கு திராவிட முன்னேற்றக் கழக தலைவருக்கு சிபாரிசு செய்கிறேன்.

பிரிந்து போகிற அதிகாரம் டெல்லியிலே இருக்கிறது. டில்லியிலே இருந்து அதிகாரத்தை சென்னைக்கு மாற்றுவதற்கு எவ்வளவு நேரமாகும்?

முகூர்த்தம் வைத்தாகி விட்டது. மணப்பெண்ணும் மாப்பிள்ளை வீட்டிற்கு வந்து விட்டாள். முகூர்த்தம் நாலு மணிக்கு என்றால், மாப்பிள்ளை கெடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே படுத்துக் கொண்டிருக்கிறான்! இந்த கெடிகாரம் இன்னும் வேகமாக ஓடாமல் இருக்கிறதே என்று கண்ணை மூடிக் கொண்டே தூங்குவது போல இருப்பான்! மாப்பிள்ளை தூங்கி விட்டானே கல்யாணம் எதற்கு என்று இருக்க மாட்டார்கள், உண்மையிலேயே மாப்பிள்ளை தூங்கிக் கொண்டிருக்க மாட்டான். கெடிகாரம் நான்கு மணி அடித்ததும், முகூர்த்தத்தில் பெண்ணுக்கு மாலை சூட்டுவான் மாப்பிள்ளை!

மாநில சர்க்காருக்கே அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டத்தில் திருத்த வேண்டுமென்று நீங்கள் ஒப்புக் கொண்டால்—அது முகூர்த்தத்திற்கு சமானம்!

தூங்குவது போல் இருக்கிறோம்—1962 வரட்டும்! நான் தூங்கி விடுவேன் என்று எந்த அரசியல் கட்சியும் எண்ணி விடக் கூடாது. தனிப்பட்டவர்களுக்கு தெரியும் நான் இரவில் அதிக நேரம் தூங்குவதில்லை என்று!

என் கட்சி தூங்காது. கண்ணை மூடிக் கொண்டு இருப்பதால் மடியிலே இருப்பதை எடுத்துக் கொள்ளலாம் என்று மடியிலே கை வைத்தால் கையை பிடித்துக் கொள்ளும்.

கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நான் பேசியதைக் கேட்டு பலர் பலவிதமாக பேசிக் கொள்கின்றனர். காங்கிரஸ்காரர்கள் பார் பாரா அண்ணாத்துரை பிரிவினையை விட்டு விட்டான் என்று கூறுகிறார்கள்!

மாறு கண் படைத்த மங்கையை பார்க்கின்ற ஆடவர்கள் நிச்சம் ஏமாறுவார்கள். அவள் வேறு எங்கு பார்த்தாலும் தன்னை பார்ப்பது போலத் தான் தெரியும்! அதைக் கண்டு மெள்ள கையை அசைத்து சைகை செய்தால் அது அவளுக்கு தெரியாது!

மாறு கண் பெண்ணைப் பார்த்து ஏமாறுவது போல் நண்பர் சிவஞானம் 'வா வா' என்று அழைக்கிறார். திராவிட நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டோம் என்று நினைக்கிறார்.

திராவிட நாட்டு பிரிவினை நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்கிறதே தவிர குறையவில்லை!

இன்று பிற்பகல், மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் கிங்சட் விஸ்கிஸ் என்பவர் என்னை பார்க்க வந்தார். அவர் இந்தியாவை சுற்றிப் பார்த்து விட்டு சென்னைக்கு வந்த போது என்னை சந்தித்தார். அவர் இரண்டு பத்திரிகைகளை நடத்தி வருகிறார்.

எல்லோரும் ஒற்றுமையை வலியுறுத்தும் இந்த சமயத்தில், தாங்கள் மட்டும் பிரிவினை வேண்டுமென்பதற்கு காரணம் என்ன? உங்கள் கழகத்தின் முக்கிய கொள்கை என்ன என்று கேட்டார்,

எங்கள் நாட்டு நிலைமையை, எங்கள் கொள்கையை அறிந்து கொள்ள வேண்டுமானால், உங்கள் நாட்டு நிலைமையை மறந்து விட்டு கேட்க வேண்டும். என்றேன்.

இன்று கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என்று பிரிந்து கஷ்டப்படுகிறார்கள்.. அதனாலே தான் முதலில் உங்கள் நாட்டு நிலையை மறந்து விட்டு கேட்க வேண்டுமென்று கூறியதற்கு காரணம்.

ஜெர்மனி நாடு ஒரு காலமாக அல்ல, பல காலமாக ஒரே நாடாக இருந்தது. பரம்பரை பரம்பரையாகவே ஒரே இனமாக வாழ்ந்த நாடு ஜெர்மன் நாடு.

யுத்தத்தில் ஜெர்மனி தோல்வி கண்ட பிறகு மேற்கு ஜெர்மனி என்றும், கிழக்கு ஜெர்மனி என்றும் பிரிக்கப்பட்டது. அமெரிக்கா தன் ஆதிக்கத்தை மேற்கு ஜெர்மனியிலும், ரஷ்யா தன் ஆதிக்கத்தை கிழக்கு ஜெர்மனியிலும் செலுத்தி வருகின்றன; உங்கள் பிரிவினை மாற்றான் ஏற்படுத்தியது. எங்கள் ஒற்றுமை மாற்றான் ஏற்படுத்தியது.

இந்தியா ஒன்று என்று ஏற்படுத்தி எங்கள் விருப்பத்திற்கு மாறாக, அடிமைச் சாசனம்

(6-ம் பக்கம் பார்க்க)

எண்ணிக்கைபலம்இருந்தால்போதுமா? எண்ண வளம் இருக்க வேண்டாமா ?

ஜனநாயக தத்துவத்தை காங்கிரஸ் அழிக்கிறது!

கலைஞர் கருணாநிதி பேச்சு !



சென்னை, வண்ணை சிற்றரசு படிப்பகத்தின் முதலாண்டு விழா தோழர் த. சேதுராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அது சமயம் தோழர் மா. ரா தேவராசன், மாணவி ஜோதி கண்ணம்மா, நகராட்சி மன்ற உறுப்பினர்களான தோழர் தி. கோவிந்தசாமி, திரு. ஜீவரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசினார்.

அன்புள்ள தலைவரவர்களே, பெரியோர்களே, தோழர்களே, அருமைத் தாய்மார்களே!

இன்றைய தினம் சிந்தனை சிற்பி சி. பி. சிற்றரசு படிப்பகத்தின் சார்பில் நடைபெறும் இவ்விழாவில் நானும் கலந்து கொள்ளும் நல்ல வாய்ப்பினை அளித்த படிப்பகத் தோழர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் அரசியல் கருத்தை அறிந்து கொள்வதற்கும், வருங்கால முடிவு பற்றி சிந்திக்கவும் நல்ல வாய்ப்பை சி. பி. சிற்றரசு படிப்பகத் தோழர்கள் அளித்திருக்கின்றனர்.

சிற்றரசு படிப்பகத்தார், சிந்தனை சிற்பி சி. பி. சிற்றரசு அவர்களை பெருமைப்படுத்துவதற்கு மட்டுமல்ல, பல நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்காக பணியாற்றியவர்களுக்கும், தாய் நாட்டு விடுதலைக்காக உழைக்கும் உத்தமர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் கடமையினை எடுத்துக் காட்டவுமே அமைக்கப்பட்டது சிற்றரசு படிப்பகமாகும்!

அண்ணன் சி. பி. சிற்றரசு அவர்கள் ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகட்டு முன்பு சுயமரியாதை இயக்கத்தில் சூறாவளி வேகத்தில், நீதிக் கட்சியின் நிழல் போன்ற அக்கட்சியின் கொள்கையை தமிழகமெங்கும் பிரச்சாரம் செய்தார்.

திராவிடர் கழகமாக இருந்த போது இந்தி எதிர்ப்பிலே கலந்து கொண்டவர், இன்று நம்மிடையே உலவி வருகிறார்.

அண்ணன் சிற்றரசு, நம்மிடையே இருந்து கோடை இடி போல் அஞ்சாத நெஞ்சன் அழகிரிக்கு ஈடாக முழங்கி வருகிறார்.

சிற்றரசு அவர்களின் பேச்சு, எழுத்து, அவர் ஆற்றுகின்ற பணியை பற்றி உங்களிடத்திலே சொல்ல வேண்டிய அவசியமில்லை. காரணம், அவரைப் பற்றி அறிமுகம் செய்து வைக்க வேண்டுமென்ற அளவுக்கு அவர் இல்லை! அவர் நல்ல உத்தமர், நல்ல தொண்டர், தலைவர்களிலே மிக மிகச் சாலச் சிறந்தவரிலே ஒருவர். உழைப்புக்கு மதிப்பளிப்பதைப் போல், நாட்டுப் பணிக்கும் பாராட்டு தெரிவிப்பது கண்டு மகிழ்கிறேன்.

சிற்றரசு படிப்பகத்திலே உள்ள தோழர்கள், அண்ணன் சிற்றரசு அவர்கள் பணியாற்றி வருவது போல் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிற்றரசு அவர்களின் பேச்சில் ஆத்திரம், ஆவேசம் இருப்பதைப் போல் நகைச்சுவை இருப்பதையும் பல பல இடங்களில் அவர் பேசிய போது கேட்டிருக்கக் கூடும்.

சிற்றரசு அவர்கள் சாதாரண ஏழை எளியவர் கூடாரத்திலே பிறந்தவர் தான்! பாட்டாளியின் பாசறையிலே பிறந்தவர் தான். மிட்டா மிராசு குடும்பத்திலே பிறந்தவரல்ல!

பத்து தோட்டம், நூறு பங்களா இருக்கும் அளவுக்கு பெரும் பணக்காரர்கள் நம்மிடத்திலே இல்லை. பெயரை வைத்துக் கொண்டு தான் பெருமைப் படுகிறோம். சின்ன ராஜு என்னும் பெயரை தமிழில் சிற்றரசு என்று வைத்துக் கொண்டார்.

சில கூட்டத்தில், மாற்றுக் கட்சிக்காரர்கள் 'எந்த நாட்டுக்கு இவர் சிற்றரசு? என்று பேசி கேலி புரிந்தார்கள். ஒரு கூட்டத்தில் 'எந்த நாட்டுக்கு நீ சிற்றரசு' என்று கேள்வி கேட்டார்கள். அப்போது சிற்றரசு—'நீ எந்த நாட்டுக்கு என்று கேட்கிறாயா? சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார் ஆள்கின்ற பக்கத்து நாட்டுக்கு' என்று பதில் கூறினார்.

கேட்கப்படும் கேள்விகளுக்கு மிக அழகாகவும், நகைச்சுவையோடு பொருத்தமான முறையில் பதில் சொல்லும் ஆற்றல் பெற்றவர்.

எதிரிகளுக்கு ஆவேசமாகவும், ஆதாரத்தோடும் நல்ல பதில் சொல்லி திராவிடர் இயக்கத்திற்கு புதிய வலிவை தந்த அண்ணன் சிற்றரசு அவர்கள் பெயராலே படிப்பகம் அமைத்திருக்கும்தோழர்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றி கூறி, நண்பர்களது முயற்சி மேலும் வளரட்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர் ஜீவரத்தினம் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சென்னை நகராட்சி மன்றத்திலே செய்த சாதனைகள் பற்றியும், திறம்பட ஆற்றிய பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார்கள்.

அவர் பேசுகிற நேரத்தில் எனக்கிருந்த கவலை யெல்லாம் நானும் கம்பீரத்தோடு—

இன்னின்ன வேலைகளை செய்தோம். சாலை—சோலைகளை அமைக்க ஏற்பாடு செய்தோம், தண்ணீர் திட்டம் போட்டோம், பணக்காரர்களுக்கு வரி போட்டோம்—ஏழைகள் துயர்துடைத்திருக்கிறோம்.

—என்று உங்களிடையே சொல்ல முடியவில்லையே என்பதுதான். எனக்கிருக்கும் கவலை சட்டமன்றத்தில் சாதித்தவைகளைப் பற்றி சொல்ல முடியவில்லையே. என்பது தான் ஜீவரத்தினம் .சொல்லுகிறார். காரணம், அவர்கள் இருப்பதோ நாற்பத்தைந்து பேர். நாங்கள் பதினைந்து பேர் தான் இருக்கிறோம்.

நூற்றுக்கு நாற்பத்தைந்து பேர் அவர்கள் நகராட்சி மன்றத்தில், காங்கிரஸ்காரர்கள் முப்பத்தி ஏழு பேர் இருக்கிறார்கள். சட்ட சபையில் நூற்றி ஐம்பது பேர் காங்கிரஸ்காரர்கள் நாங்கள் பதினைந்து பேர்!

சட்ட சபையில் என்னென்ன செய்தோம். அவரவர்களுடைய தொகுதியின் முன்னேற்றத்துக்குபோராடினோம். அதற்காக புள்ளி விவரம் தர முடியுமே தவிர, ஐந்தாண்டு திட்டத்தில் சென்னைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அளவு குறித்து விவாதித்தோம், நீர் தேக்கம், புதிய பாசனம். நீலகிரி தொழிற்சாலை, மேட்டுப் பாளையத்தில் தொழில் வளர வேண்டும் என்பது பற்றி பேசினோம்!

நாங்கள் எந்தவிதமான திட்டங்கள் கொடுத்தாலும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

இதற்கு காரணம் நாங்கள் அல்ல, நீங்கள் தான்! சட்ட மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இருப்பவர்கள் பதினைந்து பேர் தான்!

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் 150 பேர்!

எதிர்க் கட்சிகள் எல்லாமே சேர்ந்து 45 பேர் தான் இருக்கிறார்கள்!

நாங்கள் எதைச் சொன்னாலும் மெஜாரடியாக நாங்கள் 150 பேர் இருக்கிறோம், உட்காரு என்று சொல்லி விடுகிறார்கள்.

சென்னைக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று ஒருவர் செத்துக் காட்டியிருக்கிறார். அவர் உங்கள் காங்கிரசில் இருந்தவர் தான்! .விருது

(8-ம் பக்கம் பார்க்க)

நாட்டுப் பிரிவினைக் கொள்கை நாளுக்கு நாள் வளர்கிறது!

மறுத்துப் பேசியவர்களும் இப்போது மனமார ஏற்றுக்கொள்கிறார்கள்!

(அண்ணா பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதி கொடுத்ததுபோல் இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் கேட்பது பிரிவினை அல்ல—விடுதலை-என்று கூறினேன் பிறகு ஒரு மணி நேரம் திராவிட நாடு பிரிந்தால் வாழும். அதற்கான வசதிகள் இருப்பதையும் சுட்டிக் காட்டினேன்.

திராவிட நாடு பிரிந்தால் வாழுமா என்று மாற்றுக்கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள். அதற்குப் பதிலாக என்னென்ன இருந்தால் வாழ முடியும் என்று சொல்லவில்லை!

இருபது வயது வாலிபனை பார்த்து இன்னும் கல்யாணம் ஆகவில்லையா என்று கேட்டால், இப்போதென்ன அவசரம் என்பான். ஒரு வாரம் கழித்து மீண்டும் எப்போது கல்யாணம் என்றால், அவனுக்கே உள்ளத்தில் ஆசை பிறக்கும், கல்யாணம் செய்து கொண்டால் தான் என்ன என்று. மறுபடியும் சந்தித்து கேட்கிற போது இத்தனையாவது நாள், உற்றார் உறவினர் முன்னால் திருமணம் நடைபெறப் போகிறது. நீங்களும் வந்து விடுங்கள் என்று சொல்வான்!

இதை விட்டு இவனுக்கு இந்த வயதிலா திருமணம். கல்யாணம் செய்து வைத்தால் குடும்பம் நடத்துவானா, என்று கேட்டால் என்ன அர்த்தம்?

குடும்பம் நடத்துவானா என்று கேட்பதை விட, இன்னின்னது இல்லை ஆகவே குடும்பம் நடத்த முடியாது என்று சொல்ல வேண்டும்.

என்ன இல்லை? நல்ல உடற்கட்டு இல்லையா? நல்ல உள்ளம் இல்லையா? மங்கையர் மகிழும் உருவம் இல்லையா? என்பார்கள்.

ஆள் அர்ஜுனன் போல் இருக்கிறான், குடும்பம் நடத்தாமலா போவான் என்பார்கள்.

'நானும் வேலை செய்கிறேன். மாதம் எண்பது ரூபாய் சம்பாதிக்கிறேன். 'கெட்ட பழக்கம் ஒன்று கூட இல்லை, குடும்பம் நடத்த முடியாதா' என்று கேட்பான் பிள்ளை.

'அதற்குத் தான் கேட்டேன்' நீ வாங்குகிற சம்பளத்தில் குடும்பம் நடத்துவாயா என்று. நீயே அதைச் சொல்லி, கேட்டு மகிழ வேண்டுமென்று நினைத்து கேட்டேன் என்பார் தந்தை!

பிரிந்தால் வாழுமா, வாழ்வாயா என்று கேட்கிறார்கள். என்னென்ன இருந்தால் வாழ முடியும்?

வீடு குடி போக வேண்டுமென்றால், சௌகர்யம் இருக்கிறதா என்று பார்த்துத் தான் குடி போக வேண்டும், காற்றோட்டமுள்ள வசதியான இடம் தானா, கதவு சரியாக இருக்கிறதா, உள் தாழ்ப்பாள் சரிதானா என்று பார்த்து தான் போவோம்!

திராவிட நாடு பிரிந்தால் வாழுமா என்கிறார்கள், திராவிட நாடு பிரிந்தால் வாழ்வோம்! அதற்குரிய வசதிகள் அனைத்தும் இருக்கின்றன எங்கிறேன்.

திராவிட நாடு பிரிந்தால் வாழுமா என்று கேட்பவர்கள் ஜெர்மனியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, சிவஞானமானாலும் சரி, காமராசரானாலும் சரி, நேருவே கேட்டாலும் சரி அவர்களுக்கெல்லாம் திருப்பி திருப்பி இதைத் தான் கேட்பேன்.

நம் நாட்டிலே தமிழர்கள் மூன்று கோடி பேர் இருக்கிறார்கள்.

நாடு வாழ, நாட்டு மக்கள் வாழ அதற்கான அடிப்படை—குடி வளம்! அந்த வளம் நம்மிடத்திலே இருக்கிறது!

ஆட்கள் புற்றீசல் போல இருக்கலாம், வலிவு இருக்கிறதா என்று கேட்கக் கூடும்.

கூட்டத்தைப் பார்த்தாலே தெரியும். பதினெட்டு வயது வாலிபர்கள் ஒரே மாதிரியாக உட்கார முடியாது. இப்பொழுது வலிவில்லை. நம் வரலாறு பார்த்தால் தெரியும். உலகத்தோர் அஞ்சிடத்தக்க வகையில் சீரோடு சிறப்போடு வாழ்ந்தார்கள்.

வரலாறு இருக்கட்டும். ஒரு நாட்டைக் கட்டிக் காக்கும் வலிவு இருக்கலாம், சோற்றுக்கு வழி இருக்கிறதா என்று கேட்கிறார்கள்.

தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்த்த அனேகரும், அன்று வாழ்ந்த நம் புலவர்களும் தமிழகத்தின் வளத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். சோறு கிடைக்குமா என்று கேட்கின்றவர்கள் அவைகளை படிக்க வேண்டும்.

வயல்—அதற்குப் பக்கத்திலே வாய்க்கால்கள். பெரிய ஆறுகளிலே இருந்து சிற்றாறுகளுக்கும் குட்டைகளுக்கும் நீரை பாய்ச்சுகிறார்கள். அழகான நகரம்—அதை ஒட்டி கிராமம். அதற்கும் பக்கத்திலே சாலை!

வானத்தை தொடுகின்ற அளவுக்கு மலைகள்! மேக மண்டலத்தோடு மலைகள் ஒன்றோடொன்று முத்தமிட்டுக் கொண்டிருப்பது போன்ற காட்சி! இவைகள் உலகத்தில் வேறெந்த இடத்திலும் இல்லை!

அமெரிக்கா, ஐரோப்பா போன்ற இடங்களில் சூரிய வெளிச்சம் குறைவு. ரஷ்யாவில் ஒரு பகுதியில் மூன்று மாதங்கள் தான் சூரிய வெளிச்சம் இருக்கிறது!

நண்பர் சிவஞானம்—

ஞாயிறு போற்றுதும்
திங்களை போற்றுதும்
மாமழை போற்றுதும்

என்று சிலப்பதிகார வரிகளை பாடுபவர். இப்போது அதை மறந்து விட்டாரா? சிலப்பதிகாரம் படிப்பது தான் தெரிந்து கொள்வதற்கு மட்டுமல்ல, பிறருக்கும் சொல்வதற்காகத் தான்!

ஆகவே நாம் தனியரசு நடத்துவதற்கான நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. பூமிக்கடியிலே என்ன இருக்கிறது என்று கேட்கிறார்கள். சேலத்திலே இரும்பு கிடைக்கிறது. காவேரி ஆற்றங்கரை ஓரங்களிலே பெட்ரோல் கிடைக்கிறது. சேலத்தில் அலுமினியம் பாக்ஸைட் கிடைக்கிறது, திருச்சிக்கு அருகே கந்தக ரசம் தயாரிக்க ஜிப்சம் கிடைக்கிறது!

தங்கம் இருக்கிறதா என்கிறார்கள்.

மைசூரில் கிடைக்கிறது. அது கன்னடப் பகுதி என்றால், அது திராவிடப் பகுதியைச் சேர்ந்தது என்பதால் சேர்த்துச் சொல்லுகிறோம்.

நீலகிரி பகுதியிலே இருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். தங்கம் இல்லை என்பதற்காக தள்ளிவிட மாட்டோம்!

இயந்திர தொழிலுக்கு இரும்பு இருக்கிறது. இன்பமான வாழ்வுக்கு கரும்பு இருக்கிறது!

நஞ்சை, புஞ்சை வயல்! அதை உழுது பண்படுத்த திண்தோள் தமிழர்கள் இருக்கிறார்கள், வேறு என்ன வேண்டும்?

இலக்கிய வளம்—மொழி வளம் நம்மிடையே இருக்கிறது!

இப்போது மொழி வளம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நண்பர் ஜீவரத்தினம் சொன்னார். ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. 'பேரூர்தி நிலையம்' என்று போட்டிருந்ததைப் பார்த்து இது யாருக்குப் புரியும். 'சைகிள் ஸ்டாண்ட்' என்று போட்டால் நன்றாக இருக்கும் நம் வாயிலேயே நுழையாமல் இருக்கிறதே என்றாராம்!

அந்த வார்த்தை நுழைகின்ற வாய் பலபேர் இருக்கிறார்கள். இப்போது சிறு பிள்ளைகள் கூட அதைச் சுலபமாகச் சொல்லுகிறார்கள்,

'தீபஸ்தம்பம்' என்றால் என் மகன் சிரிக்கிறான். என்ன என்று கேட்கிறான். லைட் ஹவுஸ் ஸாக்ரேத் தான் தீபஸ்தம்பம் என்றால் புரியவில்லை. கலங்கரை விளக்கம் என்னும் நல்ல தமிழ் அவனுக்கு புரிகிறது. அப்படிப் பட்ட புதிய பரம்பரை இப்போது ஏற்பட்டிருக்கிறது! இப்படிப்பட்ட மாற்றம் நாட்டிற்கு உன்னதமான செல்வமாகும்!

ஆதிக்கக்காரர்கள் யாரும் இப்படித்தான் கேட்பார்கள். வெள்ளைக்காரன் சுயராஜ்யம் கொடுப்பதற்கு முன்னால் இப்படித் தான் கேட்டான்!

உனக்கு கப்பல் விடத் தெரியுமா, உனக்கு தெரிந்த கப்பல் மைலாப்பூர் கோயில் குளத்தில் மிதக்கும் தெப்பல்!

உனக்கு பீரங்கி சுடத் தெரியுமா? உனக்கு தெரிந்த பீரங்கி, காஞ்சிபுரம் கருட சேர்வைக்கு விடுகிற வாண வேடிக்கை! என்றுதான் கூறினான். அவர்கள் தெளிவோடு ஆண்டு விட்டு கேட்டார்கள். ஆளத் தெரியாத இவர்கள் கேட்கிறார்கள் திராவிட நாடு கொடுத்தால் ஆளமுடியுமா என்று.

அண்ணன்—தம்பி சண்டை போட்டுக் கொண்டால் பாகத்தை பிரித்துக் கொடு என்பான் தம்பி! அதற்கு அண்ணன், 'பாகமா, வாங்குவாயா' என்று கேட்பான். கோர்ட் படி ஏறி அலுத்துப் போன பிறகு அண்ணன் பஞ்சாயத்து கூட்டி என்ன சொல்லுகிறாய்—பாகத்தை பிரித்துக்கொள் என்பான்!

நாட்டுப் பிரிவினைக் கொள்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது -வலிவு பெற்று வருகிறது!

முதலில் முடியுமா என்பார்கள் பிறகு வழிக்கு வருவார்கள்.

பத்து வருடங்களாக நாம் சொல்லி வருகிறோம் அப்போது சஞ்சீவரெட்டி, நிஜலிங்கப்பா, நம்பூதிரி பாட் போன்றவர்கள் மறுத்தார்கள், அவர்கள் கூறிய காரணங்களுக்கு மறுத்து பதில் சொன்னதற்கு பிறகு, நமது கருத்தை விளக்கி விளக்கி சொன்னதற்கு பிறகு இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அண்ணாத்துரை சொல்லுவதிலும் 'அர்த்தமிருக்கிறது என்று.

ஆனால் நண்பர் சிவஞானம் மட்டும் என்றும் போல் உறவுக்கு வேங்கடம், உரிமைக்கு இமயம் என்று பத்துப்பதினைந்து ஆண்டுகளாக கூறிவருகிறார்!

நம் கழகம் வளர வளர மாற்றாரும் நம் பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஒதுங்கி இருப்

(12-ம் பக்கம் பார்க்க)

மொழிப் பற்றும் இனப் பற்றும் வளர விழிப்புணர்ச்சி யூட்டும் திருநாள்– பொங்கற்பெருநாள்!

நாவலர் நெடுஞ்செழியன் கருத்துரை!

எம். ஜி. ஆர். நாடக மன்றத்தாரும், அதைச் சார்ந்த சிறுவனங்களும் 14—1—60ம் தேதியன்று, தென்னிந்திய நடிகர் சங்கத்தில் நடத்திய பொங்கல், விழாவில் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது :

அறிவுசால் அவைத் தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணா அவர்களே! கலை உலகத் தோழர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

இன்று புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் நாடக மன்றத்தாரும், மற்றும் கிளை நிறுவனங்களும் சேர்ந்து கொண்டாடும் இந்தப் பொங்கல் விழாவில் கலந்துகொள்ள பெரும் வாய்ப்பளித்த அருமை நணபர்களுக்கு எனது நன்றியும், வணக்கமும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பொங்கல் விழா, எங்கும் குதூகலமாக — மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதேபோன்றுதான் இங்கும் இந்த மன்றத்தார் இந்த விழாவை நல்ல முறையில் கொண்டாடுகிறார்கள்.

காலையில் பல அறிவு விருந்துகளும், ஆற்றல் விருந்துகளும், இன்ப விருந்துகளும் நடத்தி மக்களை மகிழ்வித்திருக்கிறார்கள்.

சென்ற வருடத்தைவிட இந்த வருடம் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

சென்ற ஆண்டு நடந்ததைப் போற்றி—புகழ்ந்து பேசி இந்த ஆண்டு செய்ய வேண்டிய தொண்டுகளை விளக்கவே நாம் விழா கொண்டாடுகிறோம்.

இந்த விழாவைவிடச் சிறந்த விழா எங்கும் எதுவும் கிடையாது. இதற்கு ஈடு இணையற்ற விழாவைக் காண முடியாது. பகுத்தறிவுக்கும், அறிவுக்கும் பொறுத்தமானதுமான இந்த விழா மக்கள் விழா, அவனியெங்கும் கொண்டாடும் அற்புதவிழா, தொழிலாளர்கள் கொண்டாடும் தொன்மை விழா, பாட்டாளிகள் கொண்டாடும் பகுத்தறிவு விழா, ஆற்றல் மிக்க விழா, கருத்துமிக்க விழா, உழைப்பாளிகள் கொண்டாடும் உண்மை விழா, உழைப்பாளிகள் தங்கள் உழைப்பின் பயனை பெற்று உவகையுறும் உண்மை விழா, மக்களெல்லாம் மகிழ்ச்சியோடு கொண்டாடும் பெரும் விழா, இந்த விழா வயிற்றுக்கும் நமக்கும் சம்மந்தமிருக்கும் விழா. கருத்துமிக்க விழா, இது நமக்குப் பொருத்தமான விழா, நமக்குத் தேவையான விழா. அதனால் நாம் இந்த விழாவைக் கொண்டாடுகிறோம்.

மற்ற விழாவிற்கும், நமக்கும் சம்மந்தமில்லை. அவ்விழாக்கள் நமக்கு ஏற்ற விழாவல்ல, அவைகள் அறிவுக்குப் பொறுத்தமற்ற விழா.

இந்த பொங்கல் விழா வயிறார உண்டு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் விழா—மற்ற விழாக்கள் பட்டினி போடும் விழா, நமக்குத் தொடர்பற்ற விழா. அதைக் கொண்டாடுவது நம்மை அறிவிலிகளாக்குவதற்கு, இந்த விழா கொண்டாடுவது நம்முடைய தொன்மையை காட்டுவதற்கு கொண்டாடுவது.

இந்தப் பொங்கல் விழாவை அறுவடை விழா என்றும் கூறுகிறோம். விளைந்ததை அறுத்து பயன்படுத்தும் புதுவிழா— பொங்கலுக்கு முதல் நாளை போகி என்கிறார்கள். பழையதைப் போக்கும் நாள். போக்கும் என்பதை மாற்றி போகி என்கிறார்கள்.

இன்று புதியது தொடங்கும் புனித நாள்.

அமெரிக்கா, சைனா போன்ற நாடுகளில் இம்மாதிரி தொழிலாளர்களின் விழாக்கள் கொண்டாடி வருகிறார்கள், சங்ககால இலக்கியங்களில் கூட இந்த விழாவிற்கு ஆதாரங்கள் இருக்கிறது. மற்றபடி கொண்டாடும் விழாக்களுக்கு ஆதாரமே கிடையாது.

தைத் திங்கள் முதல் நாள் மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் நாள், அவர்களுக்குத் தைரியம் ஊட்டும். தை, பிறந்தால், வழி பிறக்கும் என்று மக்கள் தைரியமாகக் கூறுவார்கள், நம்பிக்கையூட்டும் நாள். எதிர்பார்ப்பது, கைக் கெட்டும் என்று நம்பிடும் ஒரு புனித நாள், தமிழர்களுக்கு-தமிழ் நாட்டுக்கு தைத் திங்கள் ஒரு நல்ல திங்கள் தமிழர்களுக்கு நல்ல வாழ்வளிக்கும் நல்ல திங்கள் எங்கு நோக்கினும் பச்சை பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் திங்கள் தைத் திங்கள். வண்ணப் பூக்கள் பூத்தும், நீர்கள் நிரம்பியும், எங்கு நோக்கினும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் இயற்கை வனப்புகளைக் கொண்டது.

இந்தத் தைத் திங்கள் மக்களுக்கு மகிழ்ச்சியை யூட்டுவது இந்தத் தைத்திங்கள்!

வற்றாமல், குறையாமல் நீர் நிரம்பிய வனப்புமிக்க காட்சிகளைக் காட்டும் வனப்பு மிக்கது இத் தைத் திங்கள்!

கடன் வாங்கியவர்களுக்கும் ஒரு நம்பிக்கையைக் கொடுப்பது இந்தத் தைத் திங்கள்!

ஒருவர் கடன் வாங்கினால் கடன் கொடுத்தவன் பணம் கேட்க வந்தால் பல சாக்குகளும் சொல்லியும் கொடுக்க முடியாமல் இருப்பான்! கடன் கொடுத்தவனுக்கு மறைந்து கொண்டிருப்பான்! திடீரென்று வழியில் பார்க்க நேர்ந்துவிட்டால் தூரத்தில் வரும்போதே ஐந்து விரல்களையும் மடக்கிக்கொண்டு வருவான்! கடன் கொடுத்தவன் நமக்குக் கொடுப்பதற்குக் கையில் பணம் வைத்துக்கொண்டு மூடிக்கொண்டுவருகிறான் என்று எண்ணிகொண்டுமகிழ்ச்சியோடு வருவான்! அருகில் வரும்வரைக் கை மூடிக்கொண்டே வருவான்! அருகில் வந்ததும் கடன் கொடுத்தவன், பணம் எங்கே கொடு என்றால் உடனே கடன் வாங்கியவன், ஆவணி, புரட்டாசி, ஐப்பசி என்று மடக்கியிருந்த விரல்களை நீக்கி 5 மாதம் பொறு, தை பிறக்கட்டும் உன் கடனை தீர்த்து விடுகிறேன் என்பான்!

அதனால் தான் இந்தத் தைத் திங்கள் யாவருக்கும் பயன்படும் திங்கள் என்று கூறினேன்!

பழையன கழிந்து புதியன புகும் புத்தாண்டு பிறக்கும் புனிதத் திங்கள் இந்தத் தைத் திங்கள்! ஆகவே தைத் திங்கள் முதல் நாள் வரும் இந்த விழாவை இயற்கை விழா, துயரத்தை அகற்றி, மகிழ்வைக் காப்பாற்றும், புதுப்பிக்கும் பெரும் விழா என்று கூறுகிறோம்! இந்த விழாவில் மக்கள் மட்டும் மகிழ்ச்சியோடிருப்பதில்லை! தங்களுக்குப் பயன்படும் மாட்டையும் குளிப்பாட்டி, அலங்கரித்து மகிழ்வர்! வீட்டிலுள்ள தாய்மார்களும் வீடுகளை சுத்தம் செய்து, கோலமிட்டு, அலங்கரித்து மகிழ்வார்கள்! கும்மியடித்தும், இசைகள் பாடியும் இன்பமாக இருப்பார்கள்! வீரர்கள் தங்கள் ஆற்றலையும், அறிவுத் திறனையும் காட்டும் வாய்ப்பு இந்தத் திங்களில்தான்! அதனால்தான் இந்த விழா வீர விழா என்றும் கூறுகிறோம்!

போர் முறைக்கும் ஏற்ற விழா இது! போருக்குச் சென்றவர்கள் தங்கள் உற்றார் உறவினர்களைக் காண தைத் திங்களில் தான் திரும்பி தாயகம் வருவார்கள்! படிப்புக்குச் சென்றவர்களும் இத் திங்களில்தான் தங்கள் இருப்பிடத்திற்கு திரும்புவார்கள்! இதற்குச் சான்றாகவும், இந்த விழாவிற்கு சிறப்புக்காகவும் வள்ளுவரும் பாடியிருக்கிறார்! பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற பாட்டிலும், உழுதுண்டு வாழ்வார் என்ற பாட்டிலும் எவ்வளவு மேன்மையாகப் பாடியிருக்கிறார் என்பதைக் கவனித்தால் தெரியும்! உழவுக்கு எவ்வளவு மேன்மையைக் கொடுத்திருக்கிறார் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

நாம் கலையில் உயர்ந்திருந்தோம், ஓவியத்தில் புகழடைந்திருந்தோம், சிற்பத்தில் சிறந்திருந்தோம், இசையில் புகழடைந்திருந்தோம், மொழியில் நமக்கு ஈடும், எடுப்பும் எங்குமில்லை! யாழ், குழல் இவைகளையெல்லாம் பெற்று தலை சிறந்து விளங்கினோம்! 2000 ஆண்டுகளுக்கு முன்பே பிற மொழிகளைவிட நமது தமிழ் மொழி சிறப்புப் பெற்று பெருமை பெற்றிருந்தது!

நாம் நாகரீகத்திலும், அறிவியலிலும், பண்பிலும், ஒழுக்கத்திலும் சிறந்து பிற நாட்டாரிடம் சவால் விடும் தன்மையிலிருந்தோம்! கப்பல் ஓட்டி கடல் கடந்தும், வாணிகம் புரிந்தும் வந்தோம்! பிற நாட்டார் பார்த்து பொறாமைப் படும் அளவு ஆடை நெய்து மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்பி புகழ் பரப்பி வந்தோம்! நமது வலிவையும் திறமையையும், அறிவியல் தன்மையையும் பிற நாட்டார் கண்டு வியந்தனர்! நமது போர் முறையையும், கோலோச்சும் தன்மையையும் மற்ற நாட்டார் கண்டு மகிழ்ந்தனர்! இப்படியெல்லாம் வாழ்ந்தோம். அதற்குச் சான்றுகள் இருக்கிறது. ஆனால் இன்று அந்தவலிவும் பொலிவும் இழந்திருக்கிறோம்! அடிமையாக இருக்கிறோம்! அதையெல்லாம் அடைய, மீண்டும் பெற இழந்ததை அடைய இந்த நன்னாளில் நாம் சபதம் செய்துகொள்ளவேண்டும்!

இந்த நன்னாளில்பொய் அழியவும், மெய் வாழவும் பாடுபட வேண்டும்! பொறாமையும், இழி குணங்களும் அழிந்து, நாட்டுப் பற்றும், இனப்பற்றும் ஓங்கி வளர்ந்து, மக்கள் நல் வாழ்வு வாழ, மக்களுக்கு இன்பம் பொங்க இந்த நன்னாள் வழிக் காட்டும்! எனக்கு இங்கு பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்கிறேன்' என்று பேசினார்! பாரதிதாசன் பாடிய 'சங்கே முழங்கு' என்ற பாடலைப் பாடி முடித்துக் கொண்டார்!

ஜின்னாவின் கனவு பலித்தது போல் அண்ணாவின் கனவும் நிச்சயம் பலிக்கும்!

(கருணாநிதி பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நகரில் இரண்டு பேர் இருந்தார்கள். ஒருவர் மயானத்திற்குப் போனார். இன்னொருவர் மந்திரியாக இருக்கிறார். எழுபது, எண்பது வயதான சங்கரலிங்கனார் தமிழ் நாடு என்று பெயர் வைகக வேண்டுமென்று உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தார். கல்லறையிலே புதைக்கப்பட்டார்! அவருடைய கடைசி மூச்சு இருக்கும் வரை, நினைத்த நினைப்புகளைத் தான் நாங்கள் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

இந்த நாட்டுக்கு தமிழகம், தமிழ்நாடு என்று பெயர் வைக்க உங்களால் முடியவில்லை. ஆனால் இன்னும் மந்திரிகளாக இருக்கின்றீர்கள். நீங்கள் கேட்கிறீர்கள் ஜனநாயகம் எது என்று.

பெருபான்மையோரிடம்தான் சட்ட மன்றம் இருக்க வேண்டும். அவர்கள் கையில் தான் செங்கோல் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம்! இந்த ஜனநாயக தத்துவத்தை பாழ்படுத்துகிறார்கள் காங்கிரஸ்காரர்கள்!

சென்னை மாநகராட்சி மன்றத்தில் நாம் நாற்பத்தைந்து பேர், அவர்கள் முப்பத்தி ஏழு பேர்!

இன்னின்ன திட்டங்கள் போட்டோம். ஏழைகளை வாழ வைக்க அத்தனையும் செய்தோம் என்று ஜீவரத்தினம் உங்களிடம் கூறினார். திட்டங்கள் தீட்டி சர்க்காருக்கு அனுப்பி விட்டோம். இன்னும் சர்க்கார் அனுமதி அளிக்கவில்லை என்றும் கூறினார்.

இதே திட்டத்தை நாங்கள் சட்டமன்றத்தில் எடுத்துச் சொன்னால் முடியாது என்பார்கள். ஓட்டுக்கு விடுவார்கள். திட்டம் தோற்றுப்போகும்.காரணம் அவர்கள் 150 பேர், நாங்கள் பதினைந்து பேர்!

எண்ணிக்கை பேதம் தான் ஜனநாயக மென்றால், எண்ணிக்கை பலத்தோடு எண்ண வளமும் சேர வேண்டாமா?

நகராட்சி மன்றத்தில் எண்ணிக்கை பலமும் இருக்கிறது எண்ண வளமும் இருக்கிறது!

சட்ட சபையில் 150 என்று எண்ணிக்கை இருக்கிறது! 150 தலைகள் தான் இருக்கின்றன. தலைக்குள்ளே என்ன இருக்கிறது என்பது தான் சந்தேகம்.

கொங்கு நாட்டு கோமான், கோவை தந்த சீமான் கனம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் 'இந்த திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கு என்ன தெரியும். பேசத்தான் தெரியும், திட்டம் தர முடியுமா, திட்டம் கொடுக்க அவர்களுக்கு தெரியாது என்று பேசி வந்தார். பொது மக்கள் கூட சந்தேகப்பட்டார்கள். நாமும் பதில் சொல்லாமல் இருந்தோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் திட்டம் கொடுத்தால் மறுநாளே ராஜினாமா செய்வேன் என்று நிதிஅமைச்சர் கூறினார். அறிஞர் அண்ணா அவர்கள் ஆயிரம் கோடி? ரூபாய்க்கு திட்டம் கொடுத்திருக்கிறார். திட்டம் கொடுத்த மறுநாளே ராஜினாமா செய்வேன் என்று கூறியவர். ஏன் இன்னும் ராஜினாமா செய்யாமல் இருக்கிறார்?

திட்டம் கொடுக்க முடியுமா என்றாய்-திட்டம் கொடுத்தோம் திட்டத்தை நிறை வேற்றினால் அழகு, திறமைசாலி, நிதிமந்திரி நிறைவேற்றினார் என்று பாராட்டியிருப்போம். இப்போது உன்னைப்பற்றி சந்தேகப்படுகிறோம்.

மாமனாரே, மாமனாரே உன் பெண்ணை கொடு கல்யாணம் செய்து கொள்கிறேன்.' என்றால் வீரமான மாப்பிள்ளை என்று சொல்லலாம்! அதை விட்டு 'பெண்ணை கொடு, சந்நியாசம் போகிறேன்' என்றால் என்ன அர்த்தம்? இதிலே இரண்டாவது தரத்தை சேர்ந்தவர் நிதி அமைச்சர். பெண்ணை கொடு சந்நியாசம் போகிறேன் என்று கூறுகிறார்.

திட்டம் நிறைவேற்ற பணம் தேவை என்றால் டெல்லிக்கு எழுத வேண்டும்! கடிதத்தில் கனிவு இருக்க கூடாது கடுமை இருக்க வேண்டும், பணம் அனுப்பு என்று கேட்டு நிறைவேற்றுகின்ற அதிகாரம் அவர்களுக்கு இல்லை.

ஐந்தாண்டு திட்டத்தில் 400 கோடி சென்னைக்கு வாங்கப் போகிறேன் என்று மூன்று ஆண்டுகட்கு முன்பு பேசினாரே! முதலில் 400 கேட்க, அவர்கள் முடியாது என்று மறுக்க, பிறகு 250 கேட்க 250, இருநூறாக கெஞ்சிக் கூத்தாடி, பல்லிளித்து 150 கோடி பெற்றார். கேட்டது 400 கோடி, வாங்கியதோ 150 கோடி! கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல் 400 கோடியிலே இருந்து 150 கோடி தான் கிடைத்தது!

நாம் கொடுக்கின்ற திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் நிதிஅமைச்சர் டில்லியை கேட்க வேண்டும், மூன்று காவடிகள்கட்டி காமராஜர் தோளில் ஒரு காவடியும், சுப்பிரமணியம் தோளில் ஒரு காவடியும், பக்தவச்சலம் தோளில் ஒரு காவடியும் சுமந்து கொண்டு, டில்லியிலே ஆனந்த ருத்ர தாண்டவமாடிக் கொண்டிருக்கும் நேரு பண்டிதர் முன் காவடியை இறக்குவார்கள்! அவர் என்ன விசேஷம் என்று கேட்பார்! அதற்கு நிதி அமைச்சர், 'தென்னாட்டில் அண்ணாத்துரை என்னும் படுபாவி இருக்கிறான். திட்டம் கொடுக்க முடியுமா என்று கேட்டோம். பாவி ஆயிரம் கோடிக்கு திட்டம் கொடுத்து விட்டான். இதோ திட்டம் என்று கூறினால்—'ஆகா என்ன புத்திசாலிகள்! இதோ பணம்' என்றா கூறுவார். 'ஏடா மூடா உனக்கென்ன உடம்புக்கு கேடா போ' என்று தான் விரட்டியடிப்பார்.

இங்கே இருப்பவர்கள் அதிகாரமற்றவர்கள், ஆற்றலற்றவர்கள்! திட்டம் கேட்டார்கள். கொடுத்துப் பார்த்தோமே!

ஐந்தாண்டு திட்டம் பற்றி விவாதிக்க முதலில் நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொள்ளவில்லை, வேறு அலுவல்கள் இருந்த காரணத்தால்.

இதை பயன்படுத்திக்கொண்டு மேடைக்கு மேடை — காங்கிரசிலே உள்ள பெரியவர்களிலே இருந்து ஓட்டை உடைசல்கள் வரை திட்டம் கொடுக்கத் தெரியாதவர்கள் என்று தாக்கிப் பேசினார்கள்,

மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் பற்றி விவாதிக்க கூடிய சர்வ கட்சி இரண்டாவது மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டார். மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் 10,000 கோடி ரூபாயில் நிறைவேற்றப்போகிறார்கள். சென்னை மாநிலத்திற்கு முன்னூறு கோடி போது மென்றார் நிதி அமைச்சர். கம்யூனிஸ்டு நண்பர்கள் ஐநூறு கோடிக்கு திட்டம் கொடுத்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஆயிரம்கோடிக்கு திட்டம் கொடுத்தார். அழகான,அருமையான திட்டம் இந்த நாட்டில் யாரும் சொல்லாத திட்டத்தை ஆயிரம் கோடிக்கு கொடுத்தார். சென்னை மாநிலம் சிறப்போடு தழைக்கவும், திராவிடரின் வாழ்வு செழிக்கவும் திட்டம் கொடுத்தார்!

திட்டம் கொடுக்கத் தெரியாது என்று சொன்ன நிதி அமைச்சர் சுப்பிரமணியம் என்ன சொல்ல வேண்டும்? அங்கே ஒன்றும் பதில் சொல்லாமல், சமீபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலே போய் குறைபட்டிருக்கிறார். அண்ணாத்துரைக்கு அதிக ஆசை என்று கூறி பண்டாரம் கதை சொல்லியிருக்கிறார்.

அறிஞர் அண்ணா பண்டாரம் தான், எங்களுக் கெல்லாம் தலைமைப் பண்டாரம் தான்! சாதுமிரண்டால் காடு கொள்ளாது என்பதை நிதி அமைச்சர் உணர வேண்டு. தலைமை பண்டாரத்தின் அணிவகுப்பிலே பண்டாரங்கள் படையெடுத்தால் காங்கிரஸ்காரர்களின் மண்டை கபாலங்களே திருவோடாகும் நாங்கள் பண்டாரங்கள் என்றால், நீ காவடி!

பத்து வீட்டிற்கு நாங்கள் சென்றால் சோறு கிடைக்கும். நீ காவடி-உனக்கு ஒன்றும் கிடைக்காது! இது உன் குற்றமல்ல தமிழ்நாடு காங்கிரசின் தரமும் குறைபாடும் தான் இதற்குக் காரணம்.

இப்போது தமிழ் நாடு காங்கிரசின் தலைவராக இருக்கும் அளகேசன் பேசுகிற பேச்சின் தரம் இப்படி! கடந்த தேர்தலில் காஞ்சீபுரத்தில் இந்த அளகேசன் பேசினார். காங்கிரஸ் மந்திரிகள் பேசப் பேச மக்கள் எழுந்து போய்க் கொண்டே இருந்தார்கள். அடுத்து பேசிய அளகேசன் பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை தாக்கிப் பேசி விட்டு, இந்தக் கழகத்தில் உள்ளவர்களின் பெயரைப் பாருங்கள் நெடுஞ்செழியனும், கருணாநிதியாம், அன்பழகனும், ஆசைத்தம்பியாம், மதியழகனும், மயிரழகனும்' என்று பேசினார். அப்படிப்பட்ட அளகேசன் தலைவராக இருக்கும் காங்கிரசின் தரம் எந்த அளவுக்கு இருக்கும்?

செங்கல்பட்டு மாநாட்டிலே சுப்பிரமணியம் நம்மை பண்டாரம் என்றார். இதற்கு முன்னால் காமராஜர் நம்மை பிச்சைக்காரன் என்றார். நாம் அதுவரை சந்தோஷப்படுகிறோம். நம்மைப் பார்த்து பணக்காரர்கள் என்று சொல்லாமல் பிச்சைக்காரர்கள் என்று கூறுகிறார்களே! நாம் பண்டாரங்கள் தான் அவர்கள் சண்டாளர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துப் பேசினால் தான், மத்திய சர்க்காரிலே இருக்கும் நேருவின் காதுகளிலே ஒலித்தால் தான் தனக்கு பெருமை, தனக்கு வேலை நிலைத்து நிற்கும் என்ற காரணத்தாலே தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை திட்டுகிறார்கள். கழகத் தலைவர்களையும். ஆசிரியர்களையும், நடிகர்களையும், கலைஞர்களையும்.தொழிலாளர்களையும் நிதி அமைச்சர் நாக்கிலே நரம்பின்றி பேசி. திட்டித் தீர்த்துக் கொண்டு வருகிறார்.

அவர்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் அஞ்சுகின்ற கழகமல்ல-வளர்ந்து வரும் கழகம்.

அவர்கள் திட்டுவதால் நாம் அழிந்து விட மாட்டோம், நமது கழகம் ஓங்கி வளரும்,

எனக்கு முன்னாலே பேசிய மாணவி, மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப் போட்டக் காரணத்தாலே தான் உணவுப் பண்டங்களின் விலை விஷம் போல் ஏறியிருக்கிறது என்று மிகவும் உருக்கமாக பேசியதைக் கேட்டீர்கள். ஆண்களைவிட பெண்களுக்குத் தான் இதனுடைய கஷ்டம் தெரியும்!

பன்னிரெண்டணாவுக்கு விற்றபடி அரிசி ஒன்னரை ரூபாய்க்கு விற்கிறார்கள் புளி விலை புலி போல் பாய்கிறது! இப்படிப்

(9-ம் பக்கம் பார்க்க)

நமது லட்சியத்திற்கு காங்கிரஸ் முட்டுக் கட்டை போடுகிறது! அதனால் நமது லட்சியப் பயணம் தடை படாது!

(கருணாநிதி பேச்சு)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட நிலையில் குடிசையில் வாழ்வோர் எப்படி வாழ முடியும்? இப்படிப்பட்ட ஆட்சியாளரை வாழ்த்தவா செய்வார்கள்?" காங்கிரஸ் ஆட்சி கட்டையிலே போக என்று தான் சபிக்கிறார்கள்.

உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தை குறைக்க வேண்டும் என்று சர்வ கட்சிகளும் கூடிப் பேசினர். படி அரிசி பன்னிரெண்டணவுக்கு கொடுக்கும்படி கேட்டனர்.

சட்ட சபையில் உணவுப் பண்டங்களின் விலையை குறைக்க வேண்டுமென்றும், பன்னிரெண்டணவுக்கு ஒருபடி அரிசியாவது போடுங்கள் என்றுபேசியபோது ஒரு உறுப்பினர் எழுந்து பேசினார்—என் "தொகுதியில் யாராவது, அரிசி விலை, புளி விலை ஏறி விட்டது, என்று கூறினால் விரலை வெட்டிவிடுவேன்" என்று கூறினார். பேசியவர் ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ! மேலே பார்வையாளர்கள்! எதிரே சபாநாயகர், பேசியவர் தேனி தொகுதியைச் சேர்ந்தவர்! பத்திரிகைகள் இம்மாதிரியான பேச்சுக்களை போடுவதில்லை வெளியிட்டால் தேசிய கருத்து பாழ்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறார்கள்!

அதைப் போல் நாம் சொல்லுகின்ற பெரும்பாலான கருத்துக்களை நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை!

நாம் தான் இப்படிக் கூட்டம் போட்டு சொல்ல வேண்டியிருக்கிறது! நகர மன்றத்தில் நாம் செய்கின்ற சாதனைகளைக் கூட கூட்டம் போட்டுத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது! நானே ஒரு மாதத்தில் பத்து கூட்டத்தில் பேசுகிறேன் என்றால் மற்ற மற்ற தலைவர்கள் பல கூட்டங்களிலே பேசுகிறார்கள்! அங்கெல்லாம் நண்பர் ஜீவரத்தினம், கோவிந்தசாமி போன்றோர் நகர சபை நடவடிக்கைகளை கூறுகிறார்கள்!

நகர மன்றத்து நடவடிக்கைகளையும், சட்ட மன்றத்தில் நாங்கள் பேசுகின்ற பேச்சையும் கூட்டம் போட்டுத் தான் சொல்ல வேண்டிய நிலையிலிருக்கிறோம். பத்திரிகைகளின் நல்ல துணை நமக்கு கிடைக்கவில்லை.

சட்ட மன்றத்தின் நடவடிக்கைகளை பற்றி காங்கிரஸ்காரர்கள் பேசியதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்!

அண்ணா அவர்கள் சட்ட மன்றத்தில், ஆட்டிறைச்சியை வெளி நாடுகளுக்கு பதப்படுத்தி அனுப்பினால் நல்ல லாபம் கிடைக்கும். டென்மார்கில் இத்தொழிலால் முன்னூறு கோடி வருமானம் கிடைககிறது என்று கூறினார். இதை புரிந்து கொள்ளாத மந்திரிகள் அண்ணாத்துரை கசாப்புக் கடை வைககச் சொல்லுகிறார் என்று மேடைக்கு மேடை கூறினார்கள்.

இன்னொரு அம்மையார், கருணாநிதி கடல்பாசி அல்வா கிண்டச் சொல்கிறாரே என்று சட்டசபையில் கூறினார். 'சட்ட சபையிலே கருணாநிதி சொன்ன கடல் பாசி அல்வாவை வாங்குவதற்காக நானும், மற்ற ஏழெட்டு பெண் எம். எல். ஏக்களும் சைனாபஜாருக்கும் போனோம். சைனா பஜாரை சுற்றிச் சுற்றி பார்த்தோம்—கிடைக்கவில்லை. சைனாபஜாரை விட்டு அடுத்த வீதிக்கு சென்றோம். தேடினோம் கிடைக்கவில்லை. அங்கே இருந்த அம்மையார் எங்களைப் பார்த்து 'எதை தேடுகிறீர்கள்' என்றார்கள். 'கடல் பாசி கல்லாவை' தேடுகிறோம் என்றோம். எந்த முட்டாள் கடல் பாசி அல்வா கிடைக்கும் என்று சொன்னது என்றார்கள். எங்கள் சட்டசபையில் கருணாநிதி என்று ஒருவர் இருக்கிறார், அவர் சொன்னார் என்று கூறி விட்டு திரும்பியதாக அந்த அம்மையார் கூறி வருகிறார்!

உள்ளபடியே அதை நான் சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினர்களிலே ஒருவர் சொன்னார். அந்த உறுப்பினர் சொன்னதிலும் தவறில்லை.

கடல் பாசி அல்வா தஞ்சை மாவட்டத்திலே உள்ள முஸ்லீம் குடும்பத்தில் செய்யப்படும் விசேஷமான பண்டம்! அதிராம் பட்டணத்திலும், இலங்கை வடக்கே உள்ள முஸ்லீம்களின் வீடுகளிலே இந்த அல்வா செய்கின்ற பழக்கம் உண்டு நாங்கள் சொன்னது தவறு அல்ல!

கடல் பாசி அல்வா கிண்டுங்கள் என்று இவர்களைப் பார்த்தா சொல்லுவோம். அழுக்குப் பிடித்த கரங்களை உடைய இவர்களைப் பார்த்தா கிண்டச் சொல்லுவோம்! கிண்டுவதற்கு, எத்தனையோ சகோதரிகளின் அழகான கரங்கள் இருக்கின்றன!

அருமை நண்பர் ஆசைத்தம்பி சொன்னார், ஆமை ஓடுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று! அவர் சொன்ன திட்டம், ஆட்சி பீடத்திலே உள்ள ஆமைகளுக்கு புரியவில்லை, ஆமை ஓடுகளையா என்று கேலி பேசினர். கடல் பாசி அல்வா புரியவில்லை உடல் பாசி பிடித்தவர்களுக்கு—உள்ளப் பாசி பிடித்தவர்களுக்கு!

இன்னொரு எம். எல், ஏ. கூறினார். 'திராவிட முன்னேற்றக் கழகத்தார் கனவு காண்கிறார்கள், இன்பக் கனவு காண்கிறார்கள் என்று கூறினார்.

ஆமாம் நாங்கள் கனவு தான் காண்கிறோம். எல்லா கனவும் பலிக்காது என்பார்கள். திராவிட நாடு திராவிடருக்கு என்னும் கனவு நிச்சயம் பலிக்கும். இரவிலே அதிக நேரம் கண் விழிப்பது இயற்கைக்கு மாறானது, அதனால் சுகாதாரம் கெடும் என்கிறார்கள்,

யார் கனவு காணாதவர்கள்? ஒரு காலத்தில் வெள்ளைக்காரனின் அடிமை விலங்கிலே இருந்து விடுபடுவதாக கனவு கண்டார்கள். பலிக்காமலா போய் விட்டது? கனவு காண்பது தவறா?

பதினெட்டு, இருபது வயது வாலிபன் கல்யாணம் செய்து கொண்டு, தன் மனைவியோடு கடற்கரைக்குச் சென்று தேனிலவில் உல்லாசமாக இருப்பது போல் கனவு காண்கிறான்! கல்யாணம் செய்து கொண்டால் அந்த வாலிபனின் கனவு பலிக்காதா?

திராவிட முன்னேற்றக்கழகம் திராவிட நாடு கிடைக்குமென்று கனவு காண்கிறது. நிச்சயம் கனவு பலிக்கும்,

யார், கனவு காண்பார்கள்? தூங்குகின்றவர்கள் தான் கனவு காண்பார்கள். தூங்காதவர்கள் கனவு காண மாட்டார்கள் தூங்காதவர்கள் யார்-பைத்தியக்காரர்கள்-தான் தூங்க மாட்டார்கள் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்,

தூங்குகின்றவர்கள் கனவு காண்கின்றார்கள். காங்கிரஸ் கனவு காணவில்லை-தூங்கவில்லை.

ஜின்னா கனவு கண்டார். ருஷ்யா கனவு கண்டது! ஜின்னாவின் பாக்கிஸ்தான் கனவு—பகற்கனவு, பலிக்காது என்றார்கள், ஜின்னாவின் கனவு பலித்த போது அண்ணாவின் கனவு எப்படி பலிக்காமல் போய் விடும்?

பண்டித நேரு என்ன கனவு காணாதவரா? நேரு சிறை சென்றார். ஒருநாள் நிச்சயம் இந்தியா விடுதலை அடையும் என்று கனவு கண்டார், பலிக்காமல் போய் விட்டதா?

சுதந்திரம் அடைவோம் என்று காந்தி கண்ட கனவு பலிக்காமல் போகவில்லை! ஆனால் இதை மறந்து நீ மட்டும் பகல் கனவு பலிக்காது—பாழாகி விடும் என்று கணிக்கிறாய்? திராவிட நாட்டை கொடுக்கும் அதிகாரம் இவர்களிடத்தில் இருப்பது போல் கொடுக்க மறுக்கிறார்கள்.

தேர் போகிற போது முட்டுக் கட்டை போடுவார்கள். அது போடுவதால் தேர் நின்று விடாது. நல்ல பாதையிலே ஒழுங்காக செல்லும், திராவிட முன்னேற்றக் கழகமென்னும் தேர் வீதியிலே சென்று கொண்டிருக்கிறது. காங்கிரஸ் முட்டுக் கட்டைப் போடுகிறார்கள். அவர்கள் முட்டுக் கட்டைப் போடுவதாலே தேர் நின்றுவிடாது. தேர் ஒழுங்கான பாதையில் செல்லுவதைப் போல் திராவிட முன்னேற்றக் கழகம் தன் லட்சியப் பாதையில் ஒழுங்காக செல்லும்.

இன்றைய போராட்டம் வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள போராட்டம்! இதைத் தான் நாம் உணர்த்தி வருகிறோம். அந்த உணர்ச்சி இருக்குமானால், உன் உடலிலே ஓடுவது திராவிட ரத்தமானால் நீயும் சேரு!

திராவிடம் கிடைத்தால், உன்னுடைய கல்லறையைக் காணுகிறவர்கள்—டெல்லி ஆதிபத்தியத்திற்கு அடிமையாக இருந்தவன், நேருவுக்கும் பந்துவுக்கும் அடங்கிக் கிடந்தவன் என்று காரித்துப்புவார்கள்.

ஒரு காலத்தில் தமிழனின் காலடி படாத இடங்களே இல்லை! மரக்கலங்கள் செலுத்தி கடல் கடந்து வாணிகம் செய்தனர், இன்று அந்த திராவிடர்கள் பொட்டுப் பூச்சிகளாய், புண்மைத தேரைகளாய், இழிமகனாய், இளித்த வாயர்களாய், நாயினும் கீழானவராய், அடிமையாய், தொழும்பனாய் காலடியிலே விழுந்து கிடக்கிறார்கள்!

தூங்கிய புலி விழித்ததே போல், சிங்கம் போல் டெல்லி செங்கோட்டையை செம்மாந்து பார்த்து திராவிட நாடு கொடு என்று சங்கநாதம் செய்யவேண்டும்! எத்தனை நாளைக்குப் பிறகு என்று கேட்காதீர்கள்! ஒரு நாள் சூரியோதயத்தில் திராவிட நாட்டை கேட்டார்கள்—கொடுக்கவில்லை. அவர்களாகவே எடுத்துக்கொண்டார்கள் என்று ஒரு நாள் அகில உலகச் செய்தியாக வரத் தான் போகிறது!

திராவிட நாடு கற்பனை என்று கூறுகிறார்கள். திராவிட நாடு கற்பனை அல்ல திராவிட நாடு மூதாதையர் ஆண்ட நாடு. நம்நாடு நமதானால இன்பம் தேங்கும், நன்மை தங்கும்! வடநாட்டு பிடியிலே இருந்து நாம் விடுதலை பெற வேண்டுமென்று தான் திராவிட முன்னேற்றக் கழகம் பணி செய்து வருகிறது. அதற்கு சிந்தனை சிற்பி சி. பி. சிற்றரசு 'படிப்பகம் உறுதுணையாக இருநது பயன்பட வேண்டுமென்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

ஒரு நாள் விற்பனை! நல்ல விற்பனை!

திராவிட முன்னேற்றக்கழகத்தில் பெரும் பிளவு ஏற்பட்டுவிட்டதாக போஸ்டர் போட்டு ஒரு நாள் தன் விற்பனையைப் பெருக்கிக்கொண்டிருக்கிறது ஒரு தினச் செய்தி ஏடு!

தலைமைப் பதவிக்கு பல காலமாக நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு தண்ணீரைக் கொட்டிக்கொண்டிருந்தவருக்கு எதிர்க் கட்சிகளிலும் கலகமூட்டுவதற்கும், அதே நேரத்தில் ஒரு நாளைக்காவது தன் பத்திரிகை மக்கள் கையில் இருக்கட்டுமே என்பதற்காகவும் இந்த நாரதர் வேலை செய்திருக்கிறார்! நாரதர் கலகம் பலிக்காது. நிச்சயமாக பலிக்காது!

"ஒரு நாளைக்கு நல்ல விற்பனை, நல்ல விற்பனை" என்று மகிழ்ச்சியடைய தான் இந்தக் கலகம் பயன்படும்!

நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக பாடுபட்டு வருகிறார் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்!

பொங்கல் திருவிழாவில் கலைஞர் கருணாநிதி பாராட்டு!

எம். ஜி. ஆர். நிறுவனங்கள் சார்பில் 14-1-60ல் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பேசியதாவது:

அன்புள்ள தலைவர் அவர்களே அறிஞர் அண்ணா அவர்களே, நாவலர் அவர்களே, எம். ஜி. ஆர். அவர்களே!

இன்றயதினம் எம். ஜி. ஆர். அவர்களின் தொடர்பிலுள்ள நிறுவனங்களின் சார்பில் நடைபெறும் சிரும் சிறப்புமிக்க இந்த பொங்கல் விழாவில் நான் கலந்துகொள்ளும் வாய்ப்பினையளித்த நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும், அவரது ஸ்தாபனங்களும் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் கலைத்துறைக்கும் ஆற்றிவரும் பணிகளை நாமெல்லாம் அறிந்திருக்கிறோம். அவர்கள் இன்று பொங்கல் விழாவை மிக அழகான முறையில் கொண்டாடுகிறார்கள். அதில் பலர் கருத்துரைகளும் வழங்கியிருக்கிறார்கள், என்னையும் கருத்துரை வழங்க அழைத்திருக்கிறார்கள்.

இந்த தைப் பொங்கல் தை முதல் நாளன்று கொண்டாடும் ஒரு உன்னதமான விழாவாகும். மற்ற நாட்டில் கொண்டாடும் விழாக்களுக்கும் இன்று நாம் கொண்டாடும் விழவுக்கும் மாறுபாடுகள் இருக்கின்றன. உழைப்பாளிகள் தங்கள் உழைப்பின் பயனை அனுபவிக்கும் ஒரு சிறப்பான விழாவாகும். பாடுபட்டோர் தங்கள் பலனை அனுபவிக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான திருவிழாவாகும்.

அப்படி பாடுபட்ட ஒரு பகுதியினர்தான் இந்த விழாவை இன்று மகிழ்ச்சிகரமாக கொண்டாடுகின்றனர்.

இந்த விழா தமிழகமெங்கும், பட்டிதொட்டிகளிலும், சிற்றூர்களிலும், பேரூர்களிலும் குதூகலமாக, கோலாகலமாக கொண்டாடப்படும். கொடிகளும், தோரணங்களும் கட்டி உல்லாசமாக ஊர்வலங்களும், இசை விருந்துகளும், ஆடல் பாடல்களும் நடத்தி கொண்டாடும் புனிதத் திருவிழா இது. இன்று சென்னையில்கூட பல மன்றங்கள் லாரிகளிலும், மோட்டார் வண்டிகளிலும், கும்பலாகக்கூடி ஆரவாரங்கள் செய்து பவனி வந்ததை நான் பார்த்தேன். இந்த விழா தமிழ் நாட்டில் உள்ளவர்களிடையேயும் எல்லா மக்களாலும் கொண்டாடும் இன்ப திருவிழா இது.

பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கொண்டாடிய முறை வேறு, இன்று கொண்டாடும் முறை வேறு. அப்பொழுது இந்த விழாவை மகா சங்கராந்தி என்ற பெயரால் கொண்டாடப்பட்டு வந்தது. அதற்கு பல கருத்துக்கள் கூறப்பட்டு வந்தது. எருமை, யானை போன்ற கோர உருவங்களை அமைத்து அதை வணங்கிக் கொண்டாடி வந்தனர். ஆனால், அந்த நிலை மாறி இன்று தமிழர்களெல்லாம் தங்கள் சொந்த விழாவாக — அறிவு விழாவாக, தன்மான விழாவாக — உழைப்பாளிகள் விழாவாக, பாட்டாளிகள் விழாவாக, விவசாயிகள் தாங்கள் பல நாள் பாடுபட்ட பயனை அனுபவிக்கும் அற்புத விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

15 ஆண்டுகளுக்கு முன் இந்த விழாவை கிராமப் பகுதியிலுள்ளோர்கள் தான் கொண்டாடி வந்தனர். அவர்கள் கொண்டாடுவதை நகரப்புறத்திலிருப்போர் பத்திரிகைகளில் தான் பார்த்து வந்தனர்.

இந்த விழாவைக் கொண்டாடுகிறவர்கள் காலையிலிருந்து பல நிகழ்ச்சிகளைச் செய்ததாக திரு. வீரப்பன் கூறினார். இதுபோல, பல இடங்களில் கொண்டாடப்பட்டு வரும். மற்றும் இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு நமது மக்கள் இன்னும் ஒரு முறையைக் கையாண்டு வருகிறார்கள். தங்களுடைய நண்பர்களுக்கும், உற்றார்களுக்கும் தங்களது மகிழ்ச்சியையும், பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதற்காக வாழ்த்து இதழ்களை அனுப்புவது. அப்படி அனுப்பப்பட்டு வந்ததில். எனக்கு மட்டும் ஏராளமான அழைப்பிதழ்கள் வந்திருக்கிறது. அதைப் பார்க்கக்கூட என்னால் முடியவில்லை. அப்படியென்றால், அறிஞர் அண்ணா அவர்களுக்கு எவ்வளவு வாழ்த்திதழ்கள் வந்திருக்கும், என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். சென்ற ஆண்டின் கணக்கைச் சரிகட்டி, புதிய பொலிவோடு தொடங்கும் புனித நாள் இன்று.

நண்பர் வீரப்பன் பேசும்போது, இங்கு நடைபெற்ற இசை, நடனம், உடற்பயிற்சி, காவடி விளையாட்டுகளைப்பற்றிக் கூறினார். அப்போது நான் கற்பனை செய்து கொண்டிருந்தேன், தமிழ் நாட்டின் வீரத்தையும், பண்பையும் கலைத்திறனையும் உணர்த்துவதற்காகவே அவைகளைச் செய்திருப்பார்கள். அதோடு இன்று தமிழ்நாட்டின் நன்மைக்காக இங்குள்ளவர் கர்வடி எடுக்கும் நிலையை எடுத்துக் காட்டவே காவடி விளையாட்டையும் சேர்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த விழாவில் ஒரு நாள் மகிழ்ச்சியடைகிறோம். இதற்கு பல நாள் பாடுபடவேண்டியிருக்கிறது. அன்று தமிழ் நாட்டில், தமிழர்கள் பூரிப்புடனும், மகிழ்ச்சியுடனும், தன்மான உணர்ச்சியுடனும் வாழ்ந்து வந்தார்கள்.. ஆனால், அந்த நிலை மாறி இன்று, அவல நிலையில் வாழ்ந்து வருகின்றோம், இன்று நம் நாட்டில் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் ததும்பிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் — நாமெல்லாம் மகிழ்ச்சிகரமாக விழா கொண்டாடுகின்ற நேரத்தில் நம்மை பக்குவப்படுத்திக் கொள்ளவும், பண்பாக்கிக் கொள்ளவும் நமது பழைய நிலையை ஏற்படுத்திக் கொள்ளவும் சூள் உரை எடுத்துக் கொள்ளவேண்டும்.

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கு கலையும், அரசியலும் வேறுபட்டதல்ல, இரண்டுக்கும் ஒருமைப்பட்டவர். அவர் நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக கலைத்துறையில் பாடுபட்டு வருகிறார். இன்று அரசியலிலும், கலையிலும் ஒரு நல்ல இடத்தைப் பெற்றிருக்கிறார். சினிமாவிலும், நாடகங்களிலும் நல்ல கருத்துக்களை பரப்பி அதில் நாட்டு மக்களுடைய வாழ்வு நலம் பெறுவதற்காக பாடுபட்டு வருகிறார். மக்களுடைய நல் வாழ்விற்காக எங்கெங்கு கலந்துகொள்ள வேண்டுமோ அங்கெல்லாம் கலந்துகொள்கிறார்.

இந்த நாட்டில் கலைஞர்களுக்கு எப்பொழுதும் எதிர்ப்பு இருப்பது போலவே எம். ஜி. ஆர். அவர்களுக்கும் எதிர்ப்புகள் இருந்துவருகிறது. அவர் அந்த எதிர்ப்புகளைபொருட்படுத்தாது, தான் கொண்ட கொள்கைக்காக, லட்சியத்திற்காக அயராது பாடுபட்டுவருகிறார். சமீபத்தில்கூட ஒரு ஏடு அவர் நடித்த படத்திற்கு விமர்சனம் எழுதும்போது, தன் இழிந்த மனப்பான்மையை—பொறாமைக் குணத்தைக்காட்டிக் கொண்டது. எம். ஜி. ஆர். அவர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர். பண்பு நிறைந்தவர், இரக்க குணம் நிறைந்தவர். அதைக் காட்டுவதற்காதத்தான்போலும் அந்தஏடு ஒரு பகுதியை வெள்ளையாக விட்டிருந்தது. அந்த ஏட்டிற்கும் எம். ஜி. ஆரைப் பற்றி எழுதுவதற்கு மனத்துணிவோ, தைரியமோ இன்றி தவித்துத்தான் வெண்மையாக விட்டிருக்கிறது என்று நான்கருதுகிறேன். இம்மாதிரி இழிகுணம் வாய்ந்தவர்கள்மீது நாம் இரக்கப்படுகிறோம். மக்கள் நலத்திற்காக ஊழியம் செய்துவரும்—தொண்டாற்றிவரும் ஒரு ஊழியருக்கு இடையூறு செய்துவரும் அந்த உள்ளங்கள் வாழட்டும் என்று இந்த பொங்கல் புதுநாளில் கூறி நீங்களெல்லாம் அவைகளைப் பொருட்படுத்தாது கட்டுப்பாட்டுடனும், ஒற்றுமையுடனும் இருந்து ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களுக்கு பொங்கல் வாழ்த்துகூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

தூத்துக்குடி தேர்தலில் காங்கிரசை முறியடியுங்கள்!

தமிழறிஞர் கே. ஏ. பி. விசுவநாதம் வேண்டுகோள்!

தமிழ்ப்புலவர்கள் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மேற்படி கமிட்டியின் செயலாளர் திருச்சி கே. ஏ. பி. விசுவநாதம் நன்றி கூறி பேசியதாவது —

'இன்று தமிழகத்தில் தமிழைக்காக்க, தமிழகத்தில் தமிழர்கள் விழித்தெழுந்து விட்டார்கள். தமிழால் பிழைக்கின்ற தமிழ்த் துரோகிகள் தமிழைக் கொலை செய்ய முற்படுகின்றனர். நீங்களெல்லாம், அவர்களுக்கு நல்ல புத்தி புகட்டவேண்டும். தமிழுக்கும், தமிழர்களுக்கும் விரோதமாக இருக்கும், ஏடுகளையும், துரோகிகளையும் புறக்கணிக்க வேண்டும்.

நமது மாநில அரசாங்கத்தினர் தமிழுக்கு விரோதமாக பலநிகழ்ச்சிகளை செய்து வருகிறார்கள். அதிலும் ஒரே ஒரு அமைச்சர் தமக்குப் புரியவில்லையானாலும் புரிந்ததாக நினைத்து, தமிழுக்குக் கேடு செய்து வருகிறார். அவர் யாரென்று உங்களுக்குத் தெரியும். அவர் தான் பக்தவத்சலம். வானொலி என்று சொல்லும்போது, மற்ற மந்திரிகள் வாய் மூடிக்கொண்டிருந்தார்கள் இவர் தான் குதித்து இதனால் தமிழ் கெடாதென்று கூறினார். மைல் கல்லில் தமிழ்வேண்டுமென்று கேட்டால் அதற்கும் சம்பந்தமில்லாது உளறினார். ஸ்ரீ என்ற சொல் மாறி, திரு—திருமதி என்று போடவேண்டுமென்று கூறினால் இது அவமானம் என்று கூறுகிறார். இம்மாதிரி தமிழுக்குத் துரோகம் செய்பவர்கள்-துரோகமிழைப்பவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமானால் தேர்தல்களில் காங்கிரசை முறியடிக்க வேண்டும். இந்த மாதிரி ஆட்களால்தான் காங்கிரசுக்கு மக்களிடம் நம்பிக்கை போய்விட்டது. ஆகையால் நீங்களெல்லாம் தூத்துக்குடியில் நடைபெறும் இடைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி யடைவதற்கான எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும். காங்கிரஸ் தோற்றால்தான் தமிழ் நாட்டிற்கு விமோசனம் ஏற்படும். காங்கிரசிலுள்ள நல்லவர்களும், உளறிக்கொண்டிருக்கும் அமைச்சர்களை இம்மாதிரி துரோகமான காரியங்கள் செய்யாமலாவது பார்த்துக் கொள்வார்கள்" என்று பேசி முடித்தார்.

புதிய ஜஸ்டிஸ் கட்சித் தோற்றம்!

பெரியார் ராமசாமி தலைவர்-

காமராஜ், சுப்பிரமணியம் அதன் தொண்டர்கள்!

மிட்டாக்களும், மிராசுகளும், பட்டாக்களும், பாளையக்காரர்களும் ஒன்று சேர்ந்து ஒரு புதிய கட்சியை தோற்றுவித்திருக்கிறார்கள்!

பகட்டுக்காரர்களும், பள பளக்கும் ஜரிகை தொப்பிகளும்—சீமான்களும், பூமான்களும்—செல்வக் குடி பிறந்தவர்களும், சிங்கார வாழ்வு நடத்துபவர்களும் ஒன்று கூடி ஒரு புதிய கட்சியைத் தோற்றுவித்திருக்கிறார்கள்!

அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்களால் விரட்டி, விரட்டியடிக்கப்பட்ட பட்டதாரிகளும், பதவிப் பித்தர்களும் ஒன்று கூடி ஒரு புதிய ஜஸ்டிஸ் கட்சியை உருவாக்கி இருக்கிறார்கள்! புதிய கட்சியை உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை விட ஒரு பழைய கட்சியை ஜஸ்டிஸ் கட்சியாக மாற்றிக்கொண்டு வருகிறார்கள் என்பதே பொருத்தமாகும்!

வெள்ளைக்காரனுக்கு அடி பணிந்து கிடந்தவர்கள், வெள்ளைக்காரனுடைய பூட்ஸ்கால்களை நக்கிக் கொண்டு கிடந்தவர்கள்—வெள்ளைக்காரனை "வா வா" என்று அழைத்தவர்கள், வெள்ளைக்காரனை வாயார வாழ்த்தியவர்கள்—தாயகத்திற்கு துரோகம் செய்து அடிமையாக இருக்க ஆசைப்பட்டவர்கள் அனைவரும் ஒன்று கூடி ஜஸ்டிஸ் கட்சியைப் புதுப்பித்திருக்கின்றனா, புத்துயிர் அளித்திருக்கின்றனர்!

இதைக் கேட்டால் எல்லோரும் வியப்பீர்கள், மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்படுவீர்கள்!

"எப்போது துவக்கப்பட்டிருக்கிறது அந்த ஜஸ்டிஸ் கட்சி, எங்கே துவக்கப்பட்டிருக்கிறது அந்த ஜஸ்டிஸ் கட்சி—யார், யார் தலைவர்கள், எவர் எவர் உறுப்பினர்கள், எவ்வளவு சந்தா தொகை" என்று சிலர் கேட்கவும் கூடும்!

அன்று வெள்ளைக்காரனுக்காக, வெள்ளைக்காரன் ஆட்சிக்காக அரும்பாடுபட்டு வந்த தலைவர்கள் அனைவரும் தான் இந்தக் கட்சிக்கும் பெருந்தலைவர்களாக இருக்கிறார்கள்!

அன்றைய தினம் ஜஸ்டிஸ் கட்சிக்கு தலைமை வகித்த பெரியார் இராமசாமி தான் இன்றைய தினமும் இந்த ஜஸ்டிஸ் கட்சிக்கு தலைமை வகித்து நடத்திச் செல்லுகிறார்!

அன்றிருந்த முத்தையா செட்டியார், அன்றிருந்த மாணிக்க வேலர், அன்றிருந்த பரிசுத்தம் அன்றிருந்த ராமலிங்கம், அன்றிருந்த ராமனாதபுரம் எல்லோருமே இந்த புதிய ஜஸ்டிஸ் கட்சியிலும் அங்கம் வகிக்கிறார்கள்!

"என்னப்பா இவர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சியில் அல்லவா இருக்கிறார்கள்—நீ ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லுகிறாயே" என்று கேட்கக் கூடும்!

முத்தையாக்களும், மாணிக்க வேலர்களும் இருக்குமிடத்தை ஜஸ்டிஸ்கட்சி என்று சொல்லாமல் வேறு எப்படி சொல்லுவது?

வெள்ளைக்காரனை விரட்டியடித்து, சுதந்திரம் பெற அரும்பாடு பட்ட காமராஜரும், வெள்ளைக்காரனுடைய கால்களைக் கழுவிக் கிடந்த மாணிக்க வேலரும் எப்படி ஒன்றுபட முடிந்தது? எலியும், தவளையும் ஒன்றுபட்டு வாழ முடியுமா?

கொடி பிடித்து, அடிபட்ட காங்கிரஸ்காரர்கள் வெளியேறிய பின்பு, முத்தையா செட்டிகளும், மாணிக்க வேலர்களும், வடபாதி மங்கலங்களும் உள்ளே நுழைந்த பின்பு காங்கிரஸ் கட்சியை காங்கிரஸ் கட்சி என்று அழைப்பதா? அல்லது புதிய ஜஸ்டிஸ் கட்சி என்று அழைப்பதா? சிந்தித்துப் பாருங்கள்!

அன்றைய தினம் ஜஸ்டிஸ் கட்சிக்கு பெரியார் இராமசாமி தான் தலைவராக இருந்து பணி புரிந்து வந்தார்! இன்றைய தினம் இந்த புதிய ஜஸ்டிஸ் கட்சிக்கும் பெரியார் இராமசாமி தான் பாதுகாவலராக இருந்து வருகிறார்!

அன்றைய தினம் மாணிக்க வேலர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தார்! இன்றைய தினம் அந்த மாணிக்கவேலர் தான் காங்கிரஸ் கட்சிக்கு மந்திரியாக இருக்கிறார்!

அன்றைய தினம் ராஜா சர் முத்தையா செட்டியின் அரண்மனையில் தான் கட்சிக் கூட்டம் கூடும்! இன்றைய தினம் ராஜா சர் முத்தையா செட்டியாரின் சொல்படி தான் காங்கிரஸ் கட்சி இயங்கி வருகிறது!

அன்றைய தினம் காங்கிரஸ் கட்சியின் பெரும் வைரியாக இருந்த நெடும்பலம் சாமியப்பா-அவர் மகன் இராமலிங்கம் தான் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சி சட்டசபையில் உறுப்பினராக இருந்து வருகிறார்!

அன்றைய தினம் இராமனாதபுரம் ராஜா ஜஸ்டிஸ் கட்சி! இன்றைய தினம் அவர் காங்கிரஸ் கட்சி!

அன்றைய தினம் தஞ்சை பரிசுத்தம் (நாடார்) ஜஸ்டிஸ் கட்சி! இன்றைய தினம் அவர் காந்திக் கட்சி. ஒரு எம்.எல். ஏ!

அன்றைய தினம் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்த சோமசுந்திர முதலியார்—அவருடைய தத்துப்பிள்ளை ராவ்பகதூர் தியாகராஜ முதலியார் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியிலிருந்து வருகிறார்!

அன்றைய தினம் யுத்த பிரச்சாரம் செய்து—பட்டாளத்திற்கு ஆள் சேர்த்து காங்கிரஸ் கட்சியின் விலா எலும்பை முறித்த பரமேஸ்வரன் இன்று காங்கிரஸ் கட்சி! கதர்கொடி மந்திரியாக இருந்து மாஜியானவர்! இன்று டெல்லி மேல் சபையில் அங்கத்தினராக இருக்கிறார்.

இன்னும் எத்தனை எத்தனை பேரோ இருக்கிறார்கள்! சொன்னால் பட்டியல் நீளும்! சுருக்கமாகச் சொன்னால் இன்றைய காந்தி குல்லாக்கள் அத்தனை பேரும் ஜஸ்டிஸ்காரர்கள்! காமராஜர் விதிவிலக்காக இருக்கலாம்–சுப்பிரமணியம் பள்ளியில் படித்த பையனாக இருந்த காரணத்தால் வாய்ப்புக் கிட்டியிருக்காது! மற்றபடி தூய காங்கிரஸ்காரர்கள் யார் இருக்கிறார்கள்! "பக்தவத்சலம் இல்லையா?" என்று கேட்கலாம்! நாளைய தினம், பிரான்ஸ் நாட்டிலிருந்து அழைப்பு வந்தால் அங்கே அவர் அமைச்சராகி விடுவார்! அவர் யாருக்கு சொந்தமானவர் என்பதை எவருமே சொல்ல முடியாது!

வெள்ளைக்காரதாசர்களும், சுதந்திர விரோதிகளும், நாட்டின் துரோகிகளும், சீமான்களும், பூமான்களும் நிறைந்த கட்சியை காங்கிரஸ் கட்சி என்று அழைப்பதா? ஜஸ்டிஸ் கட்சி என்று அழைப்பதா? பொது மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்!

காங்கிரஸ்காரர்கள் கையிலே பிடித்து நிற்பது கைராட்டை கொடியாக இருக்கலாம்! உற்றுப்பார்த்தால் அதிலே ஜஸ்டிஸ் கட்சியின் திராசு கொடி தெரியும்!

காங்கிரஸ்காரர்கள் அணிந்திருப்பது கதர் குல்லாய் என்று பலர் எண்ணக் கூடும்! ஆனால் மனக் கண்ணால் பார்த்தால் பள பளக்கும் ஜரிகை தொப்பி பளிச்சென்று தெரியும்!

இன்று காங்கிரஸ் கட்சிக்கு, கால நிலை காரணமாக, சந்தர்ப்பம், சூழ்நிலைக்கேற்ப காங்கிரஸ் கட்சி என்று பெயர் இருக்கலாம்! நாளைய தினம், அல்லது அதற்கு மறுதினம் நிச்சயமாக காங்கிரஸ் கட்சிக்கு ஜஸ்டிஸ கட்சி, புதிய ஜஸ்டிஸ் கட்சி. அல்லது புரட்சி ஜஸ்டிஸ் கட்சி என்று பெயர் வரத்தான் போகிறது!

இன்றைய தினம் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களின் எண்ணிக்கை கொஞ்சம் குறைவாக இருப்பதால் காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் கட்சியாகவே இருந்து வருகிறது!

நாளைய தினம் மிச்சமுள்ள ஜஸ்டிஸ்காரர்களும்—குறிப்பாக ஆற்காடு சர். ஏ. ராமசாமியும், இலட்சுமணசாமியும் சேர்ந்தால், சொச்சமாக நிற்கும் முத்தையா செட்டியின் குடும்பமும் வந்து புகுந்தால், பாக்கி இருக்கும் கபிஸ்தலமும் உள்ளே நுழைந்தால் காங்கிரஸ் கட்சிககு காங்கிரஸ் கட்சி என்ற பெயர் இருக்குமா? நிச்சயமாக இருக்காது! புதிய ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயர் தான் சூட்டப்படும்!

இந்த நிலையில் தான் நமது நிதி அமைச்சர் நம்மைப் பார்த்து துரோகிகள் என்கிறார்! வெள்ளைக்கார தாசர்கள் என்கிறார்! புதிய ஜஸ்டிஸ் கட்சியில் நிதி அமைச்சராக பணிபுரிந்து வரும் கனம் சுப்பிரமணியம் தன் நிலை மறந்து பேசுவது வருந்தத்தக்கது! மிக வருந்தத் தக்கது!

இன்றைய தினம் கைராட்டை கொடி பிடித்து நிற்கும் நிதி அமைச்சருடைய கையில், திராசு கொடி பறக்கப் போகிறது என்பதை உணர்ந்து பேச வேண்டுகிறோம்!

நமது அண்ணா அவர்களால் விரட்டியடிக்கப்பட்ட சீமான்கள் தோற்றுவிக்கப் போகும் புதிய ஜஸ்டிஸ் கட்சிக்கும் தோல்வி மேல் தோல்வி தான் கிடைக்கும் என்பதையும் முன்கூட்டியேசொல்லவிரும்புகிறோம்!

எது எப்படி இருந்த போதிலும் காங்கிரஸ் கட்சி ஜஸ்டிஸ் கட்சியாக மாறப் போவதும். அது நமக்கு எதிர்க் கட்சியாக சட்ட சபையில் அமரப் போவதும் உறுதி! இது உறுதி!

பிப்ரவரி முதல் நாள் வெளிவருகிறது!
தமிழ்க் கலைக்கோர் வண்ணப்படையல்!
"தங்கத்திரை"
(மாதமிருமுறை)
கௌரவ ஆசிரியர்: வலையாபதி முத்துகிருஷ்ணன்
முன்பணம் கட்டும் விற்பனையாளர் எங்கும் தேவை.
விபரங்கட்கு.
தங்கத்திரை
17, ஓயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

Registered as a Newspaper in CEYLON
இலங்கையில் 20 சதம்
Regd NoM. 7074 விலை 16 காசு **MALAIMANI** PhoneNo. 83285

இயந்திர தொழிலுக்கு இரும்பு இருக்கிறது!
இன்பமான வாழ்வுக்கு கரும்பு இருக்கிறது!

(அண்ணு பேச்சு)

[6-ம் பக்கத் தொடர்ச்சி)

பவர்களும் வரத்தான் போகிருர்கள். அவர்களை வரவேற்பதிலே நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஜெர்மன் எழுத்தாளர் என்னை சந்தித்தபோது கேட்டார்—

'ஐந்தாண்டு திட்டத்தில் உங்களுக்கு சரியான நியாயம் அளிக்கப்படவில்லை என்று கூறுவது உண்மைதானு?' என்ருர்

நான் அவரைப் பார்த்து—

சென்னைக்கு வருவதற்கு முன்பு கல்கத்தாவிற்கும் பம்பாய்க்கும் சென்றிருந்தீர்களே? அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

அங்கே தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகை தெரிந்திருக்கும்!

இங்கே கோயில் கோபுரங்கள் தெரிந்திருக்கும்!

அவர்கள் அங்கே தொழிலை வளர்த்திருக்கிருர்கள்—தொழில் வளர்ந்திருக்கிறது என்றேன்!

'இங்கே தொழில் வளரக் கூடாது என்ற எண்ணமா?' என்று கேட்டார்.

என்னைக்கேட்டால் எனக்கென்ன தெரியும். அவர்கள் எண்ணம் அப்படி என்றேன். அவரும் சிரித்து, உண்மைதான் என்ருர்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 1000 கோடி செலவிடப் போவதாக கூறினுர்கள்! அதில் சென்னைக்கு 100 கோடிதான் கிடைத்தது! மற்ற மாநிலங்களுக்கு அதிகப்படியான தொகை கொடுத்திருக்கிருர்கள், நமக்கு 175 கோடிகூட கிடைக்கவில்லை!

மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்திற்கு 10,000 கோடி செலவழிப்பதாக திட்டம்! நமது நிதியமைச்சர் முன்னூறு கோடி போதுமென்ருர்! நான் ஆயிரம் கோடிக்கு திட்டம் கொடுத்தேன்! ஆனுல் அதை அவர்கள் உண்மையிலேயே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்!

முதல் ஐந்தாண்டு திட்டத்தின் போதும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்போதும் மத்திய சர்க்கார் தெற்கை பொறுத்த வரையில் மாற்ருந்தாய் பிள்ளையை போல் நடத்தியிருக்கிருர்கள்!

ஆயிரக் கணக்கில் வடக்கே செலவழிக்கிருர்கள்--வளமாக்குகிருர்கள், தெற்கை புறக்கணிக்கிருர்கள். தெற்கை வாழ வைக்கவேண்டும், வளமாக்க வேண்டுமென்று அவர்களுக்கு எண்ணமும் இல்லை—திட்டமும் இல்லை!

நாம் அவர்களிடமிருந்து தனி நாடு அமைத்தால்தான் நாட்டு மக்கள் நலமாக வாழ முடியும்!

நல்ல வாழ்வுக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியும், தேவையான காரியங்களை சாதிக்க முடியும்.

ஜெர்மன் எழுத்தாளரிடமும் இதைத்தான் சொன்னேன்! அவருக்குப் புரிந்திருக்கிறது —நாம் சொல்லுவதிலே நியாயமிருக்கிறது என்று உணர்கிருர்கள்! ஆனுல் பக்கத்திலே இருக்கும் நண்பருக்கு புரியவில்லை!

தனி நாடானுல் வாழ முடியுமா, தனி நாட்டை பெறத்தான் உங்களால் முடியுமா என்று இப்போதும் கேட்கிருர்! இது சாதாரணமான கேள்வி!

நேற்று ரேக்ளா பந்தயத்தை பார்த்தேன்! பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காக மாட்டின் வாலை இழுத்தும், வாலைக் கடித்தும் ஓட்டியதைக் கண்டேன்! இந்தத் தடவை தோல்வி அடைந்தவன் அடுத்த தடவை வெற்றி பெறுவதற்காக மேலும் முயற்சிப்பான். அவனைப் பார்த்து அடுத்த தடவை வெற்றி பெற முடியுமா என்று கேட்டால் என்ன அர்த்தம்? வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை வலிவு ஏற ஏற—அவனுல் நிச்சயம் வெற்றி பெற முடியும்!

திராவிடநாடு கிடைக்குமென்பது மந்திரத்தாலே அல்ல! மாயத்தாலே மந்திரத்தாலே வந்து விடுவதல்ல திராவிடநாடு!

திராவிடநாட்டை பெறுகிற நம்பிக்கை உங்கள் இதயத்திலே இருக்கிறது! இந்த லட்சியம் உங்கள் உள்ளத்திலே ஆழப் பதிய வேண்டும்!

இதயத்தில் தனி நாடு பெறுவது நல்லது என்று கருதினுல் கிடைக்கும்!

நல்லதல்ல என்று நினைத்தால் கிடைக்காது!

வீரனு—கிடைக்கும்!

கோழையா—கிடைக்காது!

வலிவுள்ளவனு—கிடைக்கும்!

வலிவில்லாதவனு...சந்தேகம்!

இதைத்தான் சொல்ல முடியுமே தவிர, பொறு நாலு நாள் கழித்து கிடைக்கும் என்று சொல்ல முடியாது!

ரயிலுக்கு அட்டவணை போடுவதுபோல்-ஏன் ரயில் இன்னும் வரவில்லை என்று கேட்டால், நாலுமணி நேரம் பொறுத்துத்தான வரும் என்று சொல்லுவதுபோலல்ல — திராவிட நாடு எப்போது கிடைககுமென்பது!

நாட்டை மீட்கின்ற பணி அட்டவணை போடுவதல்ல! கண்ணீரிலும் இரத்தத்திலும் எழுதவேணடும். திராவிடநாடு கிடைக்க வேண்டுமானுல் இரத்தத்தோடு இரததம், கண்ணீரோடு கண்ணீரை சேர்த்து இதயத்திலே எழுத வேண்டும்.

நாம் சீரோடு சிறப்போடு வாழ்ந்தவர்கள் என்பதை சரித்திரம் கூறுகிறது—தமிழர் வரலாறு கூறுகிறது! நம் நாட்டின் வளத்தை பண்டைய இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன!

அவர்கள் அறிந்தால் நமது லட்சியத்திற்கு துணை நிற்பார்கள், அறியாதவர்களுக்கு நமது லட்சியத்தை எடுத்து விளக்கிட வேண்டும் அவர்கள் உள்ளத்திலேயும் பதிய வைக்கவேண்டுமென்று கூறி, அதற்கான பணியிலே இந்த இளைஞர் மன்றம் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்:

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ்.இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை